இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 90 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 22 – புதன்கிழமை 08 நவம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 90: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 22 - Wednesday 08 November 2023 - Dak 8 Pages ₹ 5.00




## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி நடவடிக்கை!

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் - 11.85 லட்சம் மேல் முறையீட்டு மனுக்கள்!

## குறுஞ்செய்தி அனுப்பும் பணி தொடங்கியது!

**சென்னை, நவ.8-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் மேல்முறையீடு செய்தவர்களுக்கான குறுஞ்செய்தி அனுப்பும் பணி நேற்று தொடங்கியது. தகுதியானவர்களுக்கு வருகிற 10ம் தேதி முதல் ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

2021ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலின்போது தி.மு.க. சார்பில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

**விண்ணப்பிக்கும் முகாம் தருமபுரியில் துவக்கம்!**

தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட 2023-2024ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டத்துக்கு ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்காக பெண்கள் விண்ணப்பிக்கும் முகாமினை கடந்த ஜூலை மாதம் 24ஆம் தேதி தர்மபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதற்காக தமிழகம் முழுவதும் 35 ஆயிரத்து 925 முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தப் பணியில், 68 ஆயிரத்து 190 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்காக விரிவான வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு வெளியிட்டது. இந்தத் திட்டத்தில் சேர ஒரு கோடியே 63 லட்சம் பெண்கள் விண்ணப்பித்தனர். இதில், தகுதிவாய்ந்த ஒரு கோடியே 6 லட்சத்து 55 ஆயிரம் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த குடும்ப தலைவிகளின் வங்கிக்கணக்கில் மாதந்தோறும் ரூ.1000 வரவு வைக்கப்பட்டது. இதனையடுத்து கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பயனாளிகளின் வங்கி கணக்கில் ஆயிரம்



ரூபாய் வரவு வைக்கும் பணி செப்டம்பர் மாதம் 14ஆம் தேதியே தொடங்கியது.

**காஞ்சிபுரத்தில் முதல்வர் தொடங்கி வைத்தார்!**

கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் முறைப்படி கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தபோது, 18 வயதில் அண்ணா சுடரை ஏந்தி இங்கே வந்தது நான், இன்றைக்கு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் எடுத்து வந்த, சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி, மாநில சுயாட்சி உள்ளிட்ட தமிழ்ச் சமுதாயத்தைக் காக்கும் திராவிடச் சுடரை ஏந்தி வந்திருக்கின்றேன். அவர்களுடைய கொள்கைகளை ஏற்று வாழ்வதில்தான் தமிழ்ச் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்ற "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை" தொடங்கி வைக்க இங்கே வந்திருக்கின்றேன்.

இத்திட்டம் தொடங்குவது, அதை நான் தொடங்கி வைப்பது, என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறாக நான் கருதுகிறேன்.

தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் "இனி இந்தப் பெயரை யாராலும் நீக்க முடியாது. இந்தப் பெயர் நீட்டிக்கும் காலமெல்லாம் இந்த நாட்டை அண்ணாதுரைதான் ஆள்கிறான் என்று பொருள்" என்றார்.

அதேபோல், இன்றைக்கு இந்த மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொல்கிறேன், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு பெண்கள் உரிமைத் தொகை பெறுகிறார்களோ, அத்தனை ஆண்டுகளுக்கும் இந்த ஸ்டாலின் தான் ஆள்கிறான் என்று பொருள் என்று பெருமையுடன் கூறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பெருமிதத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள இத்திட்டத்தில் மேலும் மகளிரை இணைக்கும் வகையில் இத்திட்டத்திற்கு விண்ணப்பித்து இருந்தவர்களில் நிராகரிக்கப்பட்டவர்கள் அக்டோபர் 25ம் தேதி வரை மேல்முறையீடு செய்ய வாய்ப்பு


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


---

### தீபாவளியை முன்னிட்டு நவ.13 அன்று

# அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.8-

தீபாவளியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு 13.11.2023 திங்கள் அன்று விடுமுறை அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு:-

இவ்வாண்டு தீபாவளியை 12.11.2023 அன்று கொண்டாடும் பொருட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 13.11.2023 அன்று ஒரு நாள் மட்டும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 18.11.2023 அன்று பணி நாளாக அறிவித்தும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

### முதலமைச்சரின் உத்தரவின்பேரில் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன!

# நடப்பாண்டில் மேலும் 10,000 பேருக்கு பணி நியமன ஆணை!

## தேர்வாணைய எழுத்துத் தேர்வு முடிவுகள் காலதாமதம் என வெளியான செய்திகளுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

சென்னை, நவ. 8 -

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி 2 மற்றும் தொகுதி 2அ பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வின் முடிவுகளை வெளியிடக் காலதாமதம் ஆவதாக வெளிவந்த பத்திரிக்கை செய்திகள் குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள மறுப்புரை வருமாறு:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி 2 மற்றும் 2அ பணிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வில் கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தாள் மற்றும் பொது அறிவு ஆகிய இரு தாள்களுக்கும் 25.2.2023 அன்று தேர்வு நடைபெற்றது. கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தேர்வு மற்றும் பொது அறிவுத் தேர்வினை 51,000க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் எழுதியுள்ளனர். இது ஒன்றிய அரசின் குடிமைப்பணித் தேர்வாணையம் நடத்தும் முதன்மை எழுத்து தேர்வு எழுதும் நபர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாகும்.

இத்தேர்வு முடிவுகளை வெளியிட ஒன்றிய அரசின் குடிமைப்பணி தேர்வாணையம் எடுத்துக்கொள்ளும் கால அளவு சுமார் ஐந்து மாதங்களாகும். எனவே ஒன்றிய அரசின் தேர்வாணையத்தின் செயல் திறனுக்கு நமது மாநில அரசின் தேர்வாணையத்தின் செயல் திறன் எந்த வகையிலும் குறைவானது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இப்பணி துவக்கப்பட்ட மார்ச் மாதத்தில் தேர்வாணையத்தில் ஒரு கணிப்பொறி ஆய்வகம் மட்டுமே இருந்தது. வேறு சில தேர்வுகளின் எழுத்துத் தேர்வு விடைத்தாள்களும் திருத்த வேண்டிய நிலையில் இருந்ததால் இப்பணிகள் ஆரம்பிக்க சற்றே தாமதமானது.

இதுபோன்ற தாமதம் தற்போது மட்டுமல்ல எதிர்காலத்திலும் வரக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டாவது கணிப்பொறி மதிப்பீட்டு ஆய்வகம் அமைக்க உத்தரவிட்டதன் அடிப்படையில், போர்க்கால அடிப்படையில் இரண்டாவது கணிப்பொறி ஆய்வகம் அமைக்கப்பட்டது.

இதனால் தற்போது மதிப்பீட்டுப் பணிகள் மிக விரைவாக செவ்வனே நடைபெற்று வருகின்றன. 80 விழுக்காட்டிற்கும் மேல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் வரும் டிசம்பர் முதல் வாரத்தில் முடிக்கப்பட்டு சுமார் 6000 பேருக்கு அரசுப் பணி நியமன ஆணைகள் முதலமைச்சரால் வழங்கப்படும்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் 13,000 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் முதலமைச்சர் அவர்களால் தொகுதி 4 பணியில் தேர்வு பெற்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. 2023-24ஆம் ஆண்டில் மேலும் சுமார் 10,000 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

---

# நேபாளத்தில் நிலநடுக்கம்!

புதுடெல்லி, நவ. 8 -

நேபாளத்தை தொடர்ந்துவங்கக்கடலில் நேற்றுஅதிகாலைநிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், தொடர்ந்து மேம்பாலத்தில் நிலநடுக்கம் ஏற்படுவதால் மக்கள் பீதி யடைந்துள்ளனர். தேசிய நிலநடுக்கவியல் மையம் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், 'வங்கக் கடலில் நேற்று அதிகாலை 5.32 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்தநிலநடுக்கத்தின்தீவிரம்ரிக்டர் அளவுகோலில்4.2ஆகபதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தின் மையமானது 10 கிலோ மீட்டர் ஆழத்தில்இருந்தது'என்று தெரிவித்துள்ளது.

முன்னதாகநேற்றுமுன்தினம் டெல்லிஎன்சிஆர் உட்படவடஇந்தியாவின் பல பகுதிகளில் 5.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. கடந்த மூன்று நாட்களில்இது இரண்டாவது நிலநடுக்கம் ஆகும்.

---

### விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை முன்னேற்ற திராவிட மாடல் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது!

# சென்னையில் சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 8 -

சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெறும் சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2023-2024 ஆண்டிற்கான தமிழ்நாடு பட்ஜெட்டில் விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம் நடத்தப்படும், கருத்தரங்கம் நடத்திட ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார். அதனடிப்படையில், தமிழ்நாடு விளை



யாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (டாஸ்கான் 2023), சென்னை தாஜ் கோரமண்டலில் 2023 நவம்பர் 7 மற்றும் 8 ஆகிய இரண்டு நாள்கள் இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது.

அதன்படி இக்கருத்தரங்கை நேற்று (7.11.2023) காலை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை முன்னேற்ற திராவிட மாடல் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதில் இந்தியா, பிரிட்டன், நெதர்லாந்து, மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து விளையாட்டு அறிவியல் தொடர்பான அறிஞர்கள் தலைமையில் சுமார் 250 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கம் தமிழ்நாட்டில் நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

இம்மாநாடு விளையாட்டு விஞ்ஞானிகள், பயிற்சியாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் மற்றும் விளையாட்டு தொடர்பான கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கிறது.

இந்த சர்வதேச கருத்தரங்கத்தில் விளையாட்டு வீரர்களின் செயல்திறன் மற்றும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்த விளை யாட்டு அறிவியலைப் பயன்படுத்துவது தொடர்பாகவும், மேலும் தமிழ்நாட்டில் விளையாட்டு அறிவியலின் எதிர்கால வளர்ச்சி தொடர்பாக விவாதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

---

# கலைஞானி கமலஹாசன் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து:

சென்னை, நவ.8-

கலைஞானி கமலஹாசனின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் நலம் சூழ வாழிய பல்லாண்டு என வாழ்த்தி உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**கலையுலகில் சாதனைகள் பல படைக்கும் கலைஞானி மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலஹாசன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**





**நலம் சூழ வாழிய பல்லாண்டு!**

இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 08-11-2023

# மலையகத் தமிழர் 200

இலங்கையில் மலையகத்தில் தமிழர் குடியேறி – அந்த மண்ணை வாழ்வித்து 200 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த நிலையில் மலையகத் தமிழ் மக்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதயத்தின் அடியாழத்தில் இருந்து அன்புடனும் அக்கறையுடனும் தெரிவித்த வாழ்த்துகள் ஆகும் இவை.

*** மனிதன் வாழ்ந்திராத மலைக்காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள் ஆவார்கள்.**

**மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்பகட்டத்தில் இருந்து தொடங்குகிறது.**

*** இது இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது. பின்னர், ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான்.**

*** பயிரிடப்படாத நிலத்தை பயிரிட்டும் – காடுகளாக இருந்த நிலத்தை காசுப் பயிர்களாக விளைவித்தும் பின் தங்கிய பொருளாதாரத்தை முன்னணி பொருளாதாரமாக ஆக்கியவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஆவார்கள்.**

*** இலங்கை நாட்டுக்காக தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.**

– என்று அந்த மக்களின் மகத்தான உழைப்பைப் பாராட்டி இருந்தார் முதலமைச்சர் அவர்கள்.

**“இத்தகைய மலையக மக்களின் நீதியும் உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.”** என்பதையும் வலியுறுத்தி இருந்தார் முதலமைச்சர் அவர்கள். ஏனென்றால் அம்மக்களின் நிலைமை என்பது பெரிதாக மாறிவிடவில்லை. இலங்கையை உயர்த்திய, மேம்படுத்திய அவர்களது வாழ்க்கை மேலும் முன்னேற வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக முதல்வர் அவர்கள் வலியுறுத்தி இருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் உரை, இலங்கையில் நடைபெறும் விழாவுக்காக தயாரிக்கப்பட்டது ஆகும். இலங்கையில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்களது 200 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. **“நாம் 200 - ஒற்றுமை, பன்முகத்தன்மை மற்றும் பாரம்பர்யத்தின் முழக்கம்”** என்பது இந்த நிகழ்ச்சியின் பெயர். இந்த நிகழ்ச்சியை இலங்கை மலையகத் தமிழர்களுக்காக இலங்கையின் உள்நாட்டு தோட்டத் தொழில் துறை மற்றும் அரசு தொழில் துறை அமைச்சகம் முன்னெடுத்தது. அந்த விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டதால் தயாரிக்கப்பட்ட உரை இது. ஆனால் அந்த உரை, விழாவில் ஒளிபரப்பப்படவில்லை.

இது குறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், **‘தமிழ்நாடு முதலமைச்சரின் உரையை ஒளிபரப்பக் கூடாது என்று இந்திய பா.ஜ.க. அரசு தடை போட்டுவிட்டது’** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட ஜனநாயக மறுப்பு, தமிழர் விரோதச் செய்கை இருக்க முடியாது.

முதலமைச்சர் உரையைத் தடை செய்வதன் மூலமாக, மலையகத் தமிழர்கள் மீதான தி.மு.க.வின் பற்றுதலை மறைக்கும் சதிச் செயலை ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துள்ளது.

இதே நிகழ்வில் இன்னொரு சதியையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துள்ளதை தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள்.

**“அந்த விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் முறையான அழைப்பு தமிழ்நாடு அரசிற்கு அனுப்பப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்வில் கலந்து கொள்ள இயலாத நிலையில், என்னை அந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் பணித்திருந்தார்கள். இலங்கை பயணம் மேற்கொள்வதற்காக ஒன்றிய அரசின் வெளிவிவகாரத் துறையிலிருந்து உரிய அனுமதியினை பெறுவதற்கு கடந்த மாதம் 28ஆம் தேதி உரிய வழிமுறைப்படி விண்ணப்பம் நம்முடைய பொதுத்துறையால் அனுப்பப்பட்டுவிட்டது.** political clearance **என்று சொல்லக்கூடிய வெளிவிவகாரத்தின் அனுமதி கிடைப்பதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன்,**

**அக்டோபர் 28ஆம் தேதி அன்று பொதுத் துறையின் வாயிலாக ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டது. விழா நவம்பர் 2ஆம் தேதி மதியம். ஆனால் 1ஆம் தேதி இரவு எட்டரை மணி வரை வரவில்லை. ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி இதுவரை வராத காரணத்தால் நான் பயணத்தை மேற்கொள்ள இயலாத நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டி, என்னுடைய பயண ஏற்பாடுகளை நான் இரத்து செய்துவிட்டு வீடு திரும்பினேன். அதற்குப்பிறகு ஒன்பதரை மணிக்கு மேல் அனுமதி வந்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்னதாக நான் பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்துவிட்ட காரணத்தினால், இரவு 8.30 மணிக்கு மேல் அத்தகைய அனுமதி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி, முறைப்படி விழா ஏற்பாட்டாளர்களிடம் இதனை தெரிவித்துவிட்டு பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்துவிட்டோம்.”** என்று சொல்லி இருக்கிறார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

வெளிநாட்டில் நடைபெறும் விழாவுக்கு அனுமதி தருவதில் ஒன்றிய அரசு எப்படி நடந்து கொண்டுள்ளது என்பதன் மூலமாக – எதனால் இப்படி நடந்து கொண்டது என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

குடியுரிமைச் சட்டத்தின் மூலமாக இலங்கைத் தமிழர்களை குடியுரிமை அற்றவர்களாக ஆக்கிய பா.ஜ.க., இப்போது மலையகத் தமிழர்கள் விழாவில் எத்தகைய சதிச்செயல்களில் ஈடுபடுகிறது என்பது புரிகிறது. இந்த நிலையில் மலையகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்ள பா.ஜ.க. அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கை சென்றிருக்கிறார்.

**இன்னமும் இந்திய மீனவர்கள், படும் துன்ப துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் துப்பு இல்லாத பா.ஜ.க. இலங்கைக்குப் போய் மலையக மக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பது காலக் கொடுமையே ஆகும்.**

## டெல்லியில்

### காற்று மாசுவை கட்டுப்படுத்த வாகனங்களுக்கு கட்டுப்பாடு!

*புதுடெல்லி, நவ. 8 -*

*டெல்லியில் காற்று மாசுவை கட்டுப்படுத்த, வாகனங்களின் ஒற்றை - இரட்டை இலக்கு பதிவெண்கள் அடிப்படையில் மாற்று தினங்களில் வாகனங்களை இயக்கும் கார் கட்டுப்பாடு திட்டத்தை, வரும் நவம்பர் 13ம் தேதி முதல் 20ம் தேதி வரை அமல்படுத்தப்பட உள்ளதாக மாநில சுற்றுச் சூழல்துறை அமைச்சர் கோபால் ராய் நேற்று முன்தினம் அறிவித்தார். முதல் முறையாக கடந்த 2016ம் ஆண்டு டெல்லியில் இந்த கார் கட்டுப்பாடு திட்டத்தை ஆம் ஆத்மி அரசு அமல்படுத்தியது. இத்திட்டம், நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தீபாவளிக்கு பின்னர் அமல்படுத்தப்பட உள்ளது.*

*ஒற்றைப்படை - இரட்டைப்படை கார் கட்டுப்பாடு திட்டம் தீபாவளிக்குப் பிறகு டெல்லியில் வரும் நவம்பர் 13 முதல் நவம்பர் 20 வரை நடைமுறைக்கு கொண்டுவரப்பட உள்ளது. இதன் தாக்கம் குறித்து ஆய்வு செய்து அதன் பின் நவம்பர் 20 ம் தேதிக்குப் பிறகு இந்தத் திட்டத்தை நீட்டிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று அதிகாரி தெரிவித்தார்.*




நீட் எதிர்ப்புக் களத்தில் முன் வரிசையில் நிற்கிற தமிழ்நாட்டின் குரலாக, கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவரணி சார்பில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தின் ஒரு பகுதியாக, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களை நேரில் சந்தித்து, அவரிடமும், ம.தி.மு.க. முன்னணியினரிடமும், நீட் எதிர்ப்புக்கான கையெழுத்துகளைப் பெற்றார். அதுபோது அமைச்சர் பி.கே.சேகர் பாபு மற்றும் ம.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துரைவைகோ உள்ளிட்ட ம.தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## இராமநாதபுரம், அரியலூர் மாவட்டங்களில்

# ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசு முயற்சி!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, நவ. 8 -

இராமநாதபுரம், அரியலூர் மாவட்டங்களில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசு முயற்சிப்பதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு கடந்த 2020ஆம் ஆண்டே காவிரிப் படுகை மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து சட்டம் இயற்றியுள்ளது. இந்தச் சட்டத்தால் புதிதாக அனுமதி பெற்று எந்த ஹைட்ரோ கார்பன் கிணறுகளையும் அமைக்க முடியாது. ஆனால், ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட கிணறுகள் தொடர்ந்து இயங்குவதை இச்சட்டம் கட்டுப்படுத்தாது.

ஒன்றிய அரசின் புதிய எண்ணெய் எடுப்பு கொள்கையாகிய, ஹெல்ப் (Hydro carbon Exploration and



Licensing Policy HELP) அடிப்படையில், மூன்றாவது சுற்று திறந்த வெளி ஏலம் (OALP) மூலம் ஒன்றிய அரசின் ஓ.என்.ஜி.சி (ONGC) நிறுவனம், ராமநாதபுரம் மாவட்டத்தில் 1403.41 சதுர கிலோமீட்டர் பகுதியில் (இதில் தரைபகுதி - 1259.44 மற்றும் ஆழமற்ற கடல் பகுதியில் 143.97 ச.கிமீ.) ஹைட்ரோ கார்பன் எடுக்க அனுமதி பெற்றிருந்தது. தற்போது அந்தப் பகுதியில் 2000 முதல் 3000 மீட்டர் ஆழத்தில் 20 சோதனை கிணறுகளைத் தோண்ட ஓ.என்.ஜி.சி. திட்டமிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தின் திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி, கீழக்கரை மற்றும் கடலாடி வட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை வட்டம் போன்ற பகுதிகளில் புதிதாக கிணறுகள் அமைக்க ஓ.என்.ஜி.சி. அனுமதி கோரியுள்ளது.

தற்போது அந்தப் பகுதியில் 2000 முதல் 3000 மீட்டர் ஆழத்தில் 20 சோதனை கிணறுகளைத் தோண்ட ஓ.என்.ஜி.சி. திட்டமிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 20 இடங்களில் ஹைட்ரோகார்பன் சோதனைக் கிணறுகள் அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் கடந்த 31.10.2023 அன்று விண்ணப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையில், 2020ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி ஹைட்ரோகார்பன் ஆய்வுக் கிணறுகளுக்கு ஒன்றிய அரசின் அனுமதி அவசியமில்லை. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு, சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் அவசியமில்லை என்றும் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி கோரி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் தற்போது விண்ணப்பித்துள்ளது.

மேலும் அரியலூர் மாவட்டத்திலும் 10 ஆய்வுக் கிணறுகள் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிகோரி ஓ.என்.ஜி.சி. நிறுவனம் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் அனுமதி கோரி உள்ளது.

ஹைட்ரோகார்பன் கிணறுகளால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில் தலைமையிலான நிபுணர் குழுவும் அரசிடம் அறிக்கை அளித்துள்ளது.

இந்த நிலையில் புதிய கிணறுகளை தமிழ்நாட்டில் அமைப்பதற்கு ஓ.என்.ஜி.சி. முயல்வது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

தமிழ்நாடு அரசு, ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் விண்ணப்பத்தை நிராகரிப்பதுடன், இராமநாதபுரம் மாவட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை ஒன்றிய அரசு மேற்கொள்ள முயற்சிப்பதை அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## தீபாவளி பண்டிகை:

# சென்னையில் 3 அடுக்கு பாதுகாப்பு!

*சென்னை, நவ. 8 -*

*தமிழகம் முழுவதும் வரும் 12ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தீபாவளி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு பொதுமக்கள் கடைகளுக்கு சென்று பலகாரம், உடைகள் உள்ளிட்ட தேவையான பொருட்களை வாங்கி வருகின்றனர். பண்டிகை காலத்தில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடந்து விடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறது.*

*பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கும் வெளியூர் செல்வதற்கும் சென்னையில் அதிகளவு கூடும் இடங்களான தி.நகர், பாண்டி பஜார், புரசைவாக்கம், மயிலாப்பூர், பூக்கடை, வண்ணாரப்பேட்டை, கோயம்பேடு ஆகிய பகுதிகளில் சென்னை பெருநகர காவல் துறை சார்பில், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துதல், குற்ற தடுப்பு முறைகள் போக்குவரத்தை நெரிசல் ஏற்படாமல் வாகனங்களை ஒழுங்குப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*பல்வேறு இடங்களில் தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. போலீசார் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டு, நேரடியாகவும், பைனாகுலர் மூலமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.*

*முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் மருத்துவ குழுவினர்கள் அடங்கிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களுடன் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பட்டாசு கடைகளின் அருகில் காவல்துறை சார்பில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அசம்பாவிதங்கள் நிகழாமல் கண்காணித்து வருகின்றனர். இதற்காக 18,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.*

## நவம்பர் 9ஆம் தேதி பிறந்த நாள்! கழகத்தினருக்கு அமைச்சர்

# கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வேண்டுகோள்!

*திருச்சி, நவ. 8 -*

*கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*



*எனது பிறந்த நாளான வருகின்ற நவம்பர் 9ஆம் தேதி வியாழக்கிழமை அன்று நான் ஊரில் இல்லை, அன்றைய தினம் என்னுடைய பிறந்த நாளை ஒட்டி என் மேல் அன்பு கொண்ட நல்ல உள்ளங்களும் நண்பர்களும், கழக நிர்வாகிகளும், உடன்பிறப்புகளும் திருச்சிக்கோ, சென்னைக்கோ நேரில் வந்து எனக்கு வாழ்த்துத் தெரிவிக்க வர வேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மேலும் அன்றைய தினம் என்னுடைய பிறந்த நாள் விழா என்ற பெயரில் எவ்வித நிகழ்ச்சிகளையும் தயவு செய்து யாரும் நடத்திட வேண்டாம் என்பதை கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், நண்பர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.*



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2000 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. இந்திய அளவில் முதன்முதலில் ஆட்டோ ஓட்டும் தொழிலாளி லூர்துராஜ் என்பவர் சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் கருணாநிதியை நெறியாளராகக் கொண்டு கவிப்பேரரசு வைரமுத்து திரைப்பாடல்கள் குறித்து ஆய்வு செய்தார். பகுதி நேர ஆய்வாளராகிய அவர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். ஆட்டோ ஓட்டும் தொழிலாளி லூர்துராஜ்க்கும், அவரின் நெறியாளர் முனைவர் இரா.கருணாநிதிக்கும் தலா பத்தாயிரம் ரூபாயும் நினைவுப் பரிசும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடிகர் புரட்சித் தமிழன் சத்யராஜ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வழங்கினார்.

மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

## படகுகளை விடுவித்து, அபராதத் தொகையையும் ரத்து செய்திட நடவடிக்கை கோரி முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, நவ.8–

**மாலத்தீவு கடலோரக் காவல் படையின ரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களையும், அவர்களது மீன் பிடிப் படகுகளை விடுவிப்பதோடு, அவர்க ளுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகை யினை இரத்து செய்திட உரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

**இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:–**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள், IND TN12MM6376 என்ற பதிவு எண் கொண்ட 'ஹோலி ஸ்பிரிட்' என்ற படகில் கடந்த 22.10.2023 அன்று மீன்பிடிக்கச் சென்ற போது மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படை யின் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையினை ரத்து செய்திடவும், அவர்களையும், அவர்க ளது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2023) கடிதம் எழுதியுள்ளார்.

**மாலத் தீவு அரசால் விதிக்கப்பட்ட அபராதம்!**

அந்தக் கடிதத்தில், மாலத் தீவு கடலோரக் காவல் படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீன்பிடிப் படகின் ஓட்டுநருக்கு, கடந்த 1.11.2023 அன்று, மாலத்தீவு குடியரசின் மீன் வளம், கடல் வளம் மற்றும் வேளாண்மை அமைச்சகம், மாலத்தீவின் பணமதிப்பில் 42,00,000, அதாவது, இந்திய மதிப்பில் சுமார் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் அபரா தம் விதித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முத லமைச்சர் அவர்கள், அறிவிப்பு கிடைத்த 30 நாட்களுக்குள் மேற்படி அபராதத் தொகையை செலுத்த வேண்டும் என்றும், அதுவரை, அந்த மீன்பிடிப் படகு மாலத்தீவு காவல் படையினரின் வசம் இருக்கும் என்றும் மாலத் தீவு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதை தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாலத்தீவு கடலோரக் காவல் படையின ரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீன வர்களும், அவர்களது குடும்பத்தினரும், மீன் பிடித் தொழிலை மட்டுமே தங்களது வாழ்வா தாரமாகக் கொண்டுள்ளனர் என்று குறிப்பிட் டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது விதிக்கப்பட்டிருக்கும் இந்த அபராதத் தொகை மிக அதிகமானது என்றும் அவர்க ளது சக்திக்கு அப்பாற்பட்டது என்றும், இது அவர்களையும், அவர்களது குடும்பத்தினரை யும் நிரந்தரமாக வறுமையில் தள்ளிவிடும் என்றும் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

**தக்க நடவடிக்கையை உடனடியாக எடுத்திடுக!**

இந்தப் பிரச்சினையில், மாலத்தீவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் சார்பாக, ஒன் றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, மீன்பிடிப் பட கிற்கு விதிக்கப்பட்ட அபராதத்தை இரத்து செய்யவும், மீனவர்களையும், அவர்களது மீன் பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென் றும் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தக்க நேரத்தில் தலையிட்டு மேற்கொள்ளும் நடவடிக்கை, கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள தமிழ்நாட்டைச்சேர்ந்த அந்த மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உரிய நிவா ரணத்தை அளிக்கும் என தான் நம்புவதாக தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

அளிக்கப்பட்டது. அந்த வகையில் இதுவரை 11 லட்சத்து 85 ஆயிரம் பேர் மேல்முறையீடு செய்திருந் தனர்.

இந்நிலையில், மேல்முறையீடு செய்தவர்களின் விண்ணப் பங்களை பரிசீலிக்கும் பணிகள் வேகமாக நடைபெற்றன.

மேல்முறையீடு செய்தவர்க ளுக்கான குறுஞ்செய்தி அனுப்பும் பணி நேற்று முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தகுதியான அனைவருக்கும் மகளிர் உரிமை தொகை கிடைப் பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளதாகவும், நவம்பர் 10ம் தேதி முதல் தகுதியானவர்களின் வங்கி கணக்கில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

**தமிழ்நாட்டில் வங்கிக்கணக்கு மகளிர் எண்ணிக்கை அதிகரிப்பு!**

பெண்களின் முன்னேற்றத் திற்காக தமிழ்நாடு அரசு புரட்சிகர மான பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. கலை ஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடிக்கும் மேற் பட்ட பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரி மாணவி களுக்கு மாதம் 1000 ரூபாய் உத வித்தொகை வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு கடன் உதவி என ஏராளமான திட்டங்கள் செயல்படுத் தப்பட்டு வருகின்றன. இதனால், தமிழ்நாட்டில் பெண்களின் பொரு ளாதார நிலை உயர்ந்து வருகின் றன. தமிழ்நாடு அரசின் மக்கள் நலத் திட்டங்களை பிற மாநிலங் களும் பின்பற்றி வருகின்றன.

இந்நிலையில், அரசின் நலத்திட் டங்களால் தமிழ்நாட்டில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண் களின் எண்ணிக்கை அதிகரித் திருப்பது ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

**பெண்களின் வங்கிக் கணக்கில் தமிழ்நாடு முதலிடம்!**

"தேசிய குடும்ப நல ஆய்வு அறிக்கையின்படி, 15 முதல் 49 வயது வரையிலான வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண் களில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது" என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. தமிழ்நாட்டில், 15 முதல் 49 வயது வரையிலான, 92.2 சதவீத பெண்கள் வங்கிக் கணக்கு வைத்துள்ளனர். பெண்கள் அதிகா ரம் பெறுவதற்கு நிதிச் சேர்க்கை அவசியம் என்றும் அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

---

அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் பங்கேற்பு! திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி

## திருக்கோயிலில் கந்தசஷ்டி பெருவிழா முன்னேற்பாடு பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, நவ.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மீன் வளம்- மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகி ருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (6.11.2023) திருச்செந்தூர், அருள்மிகு சுப் பிரமணிய சுவாமி திருக்கோயி லுக்கு வருகை தந்து, இந் தாண்டு நடைபெறவுள்ள கந்த சஷ்டித் பெருவிழா மற்றும் சூர சம்ஹார நிகழ்ச்சிக் கான முன் னேற்பாடு பணிகள் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட தோடு, திருக்கோயில் வளாகத் தில் ரூ.49.50 லட்சம் மதிப்பீட் டில் யானை நினைவு மண்ட பம் மற்றும் ரூ. 97 லட்சம் மதிப் பீட்டில் புதிய பசுமடம் கட்டு வதற்கான பணிகளுக்கு அடிக் கல் நாட்டினர்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித் ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் ரூ.20.66 கோடி மதிப்பீட்டில் 123 திருக்கோயில்களில் அமைந்துள்ள 127 பசுமடங் களை மேம்படுத்தி பாதுகாத் திட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல் புதிதாக இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கோயில்பதாகை, திருவ ரங்கம், திருவண்ணா மலை, திருச்செந் தூர் ஆகிய 4 இடங் களில் ரூ.19 கோடி மதிப்பீட் டில் கூடுதலாக புதிய பசு மடங் களை கட்டுவதற்கு திட்ட மிடப்பட்டு, இன்றைய தினம் திருச்செந்தூரில் ரூ.97 லட்சம் மதிப்பீட்டிலான புதிய பசும டம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இறைவ னுக்கு நிகராக பக்தர்களால் வழிபட்டு வந்த திருக்கோயில் யானைகள் இறந்த பிறகு அதன் நினைவாக 11 இடங்க ளில் யானை மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறி விக்கப்பட்டது. தற்போது ரூ.5.54 கோடி மதிப்பீட்டில் யானை மணிமண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திருச்செந்தூர் திருக்கோயி லில் இன்றைய தினம் யானை மணி மண்டபம் கட்டுவதற்கு பணி கள் தொடங்கி வைக்கப்பட் டுள்ளன.

திருச்செந்தூர், சுப்பிர மணிய சுவாமி திருக்கோயி லில் ரூ.206 கோடி மதிப்பீட் டில் எச்.சி.எல் நிறுவனத்தின் மூலம் 20 திருப்பணிகள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருகின்றன. அதில் 35 சதவீத பணிகள் இதுவரையில் முடிவுற்றிருக்கின்றன. மேலும், திருக்கோயில் நிதியின் மூலம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 18 திருப்பணி களும் தொடங்கப் பட உள்ளன. இத்திருக்கோயி லில் நடைபெறும் கந்த சஷ்டி பெருவிழாவின் சூரசம்ஹார நிகழ்விற்கு லட்சக்கணக்கான மக்கள் வருகை தந்து வழிபட்டு செல்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிகளையும் கடந் தாண்டு திராவிட மாடல் ஆட்சி செய்து கொடுத்தது. கட்டுமானப் பணிகள் நடை பெற்று வந்தாலும் கடந் தாண்டை போலவே பக்தர்க ளுக்கு எந்த விதமான அசௌ கரிமும் இல்லாமல் தேவை யான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று முதலலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கந்த சஷ்டி விரதம் தொடங் கும் முதல் ஐந்து நாட்களுக்கு தினம் ஒரு லட்சம் பக்தர்க ளும், சூரசம்ஹார தினத்தன்று சுமார் ஐந்து லட்சம் பக்தர்க ளும், திருக்கல்யா ணத்திற்கு சுமார் இரண்டு லட்சம் பக்தர் களும் கூடுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக திரு விழா காலங்களில் சுமார் 20 லட்சம் பக்தர்கள் கூடுகின்ற நிலை இருக்கும் என்பதால் பக் தர்களுடைய தேவைக்கேற்க 16 இடங்களில் சுமார் 1,250 வாகனங்கள் நிறுத்தும் அள விற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத் தப்பட உள்ளது. 12 இடங்க ளில் கண்காணிப்பு கோபுரங்க ளும், ஏற்கனவே இருக்கின்ற சிசிடிவி கேமராக்கள் மட்டு மின்றி 100 இடங்களில் புதி தாக சி.சி.டி.வி. கேமராக்கள் அமைக்கப்பட உள்ளன. விழா நாட்களில் 2,500க்கும் மேற் பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள் ளனர்.

அதேபோல் ஐந்து இடங்க ளில் ஆம்புலன்ஸ் வசதிகளும், முக்கிய இடங்களில் மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். தினந்தோறும் 400 தூய்மை பணியாளர்கள் பணியில் ஈடுப டுத்தப்பட்டு குப்பைகள் உட னுக்குடன் அகற்றப்பட்டு சுகா தாரம் பேணி காக்கப்படும். திருக்கோயில் சார்ந்த பாது காப்பு பணியில் 180 நபர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தற் காலிக பேருந்து நிலையங்கள் மூன்று இடங்களில் ஏற்படுத்த உள்ளோம்.

மேலும், 21 இடங்களில் கொட்டகை அமைக்கப்பட்டு, 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்குகின்ற வகை யில் வசதிகள் ஏற்படுத்தித் தரப் படும். அங்கு அடிப்படை வச திகளான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்றவை முழு மையாக நிறைவேற்றி தரப் படும். பக்தர்களுக்கு இறை வன் அருள் கிடைக்கவும், விரைவாக தரிசனம் மேற் கொள்ளவும், தேவையான ஏற் பாடுகளை மாவட்ட நிர்வா கம், இந்து சமய அறநிலை யத்துறை, காவல்துறை, வரு வாய்த்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மருத்துவத்துறை போன்ற அனைத்து அரசு துறை களும் ஒருங்கிணைந்து மேற் கொள்ளும். இப்பணிகளை சிறப்பாக நிறைவேற் றிட மாவட்ட ஆட்சியர் தலைமை யில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்தாண்டு கந்த சஷ்டி பெரு விழா கடந்தாண்டை போல சிறந்த முறையில் நடைபெறும்.

யாத்திரி நிவாஸ் பணிகளை கடந்த ஆட்சி காலத்தில் எடுத் தேன் கவிழ்த்தேன் என்று கட்டி விட்டு சென்று விட்டார் கள். அதற்கு தேவையான பர் னிச்சர்கள் வாங்குவதற்கு கூட நிதி ஒதுக்கவில்லை. சுற்றுச்சுவர் அமைக்க கூட நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணிகள் ரூ.19 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இன்னும் 45 நாட்க ளுக்குள் பணிகள் முடிக்கப் பட்டு பக்தர்கள் பயன்பாட் டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

நமக்கு ஒரு சில நாட்களில் உடல் உபாதைகள் ஏற்படு கின்ற போது கசப்பான மருந்தை உட்கொண்டு தான் ஆக வேண்டும். அப்போது தான் ஆரோக்கியமாக இருப் போம். அதுபோல தற்போது திருக்கோயிலில் நடைபெறு கின்ற கட்டுமானப் பணிக ளால் இன்னும் 50 ஆண்டு காலத்திற்கு பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிக ளும் கொண்ட திருக்கோயி லாக அமையும் என்பதால், தற்போது ஏற்படும் சிறு சங்க டங்களை பக்தர்கள் பொறுத் துக்கொள்ள வேண்டும். இருப் பினும் 21 இடங்களில் தற்காலிக ஷெட்டுகள் அமைக் கப்பட்டு முப்பதா யிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்கு வதற்கான வசதியும் ஏற்படுத் தப்பட்டு வருகிறது. ஆகவே, பக்தர்களுக்கு எவ்வித இடை யூறும் ஏற்படாது.

சஷ்யின்போது திருக்கோயி லில் ஏற்கனவே என்ன நடை முறை இருக்கின்றதோ அந்த நடைமுறைதான் தற்போது தொடரும். புதிதாக எந்த நடைமுறையும் சஷ்டிக்கு முன் பாக கொண்டு வரப்பட மாட் டாது. முதலமைச்சர் அவர்க ளின் வழிகாட்டுதலின்படி, பக்தர்கள் விரை வாக, எளிதாக சுவாமி தரிசனம் செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் இந்து சமய அறநிலையத்துறை மேற்கொண்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அனைத்து ஏற்பாடுகளை யும் தொடர்ந்து கண்காணித்து வருகி றார். பாது காக்கப்பட்ட குடி நீர் மற்றும் கழிப்பிட வசதி களை கூடுதலாக செய்துதர மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருக்கின்றது. திருக்கோயி லில் நடைபெற்று வரும் கட்டு மானப் பணிகள் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படாமல் முழு மையாக சிறந்த முறையில் நிறைவுறும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமி பதி, திருக் கோயில் அறங்காவ லர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர்கள் எம்.கார்த்திக், எம்.அன்புமணி மற்றும் அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகத்தில் யானை நினைவு மண்டபம் கட்டுவதற்கான அடிக்கல்லை மீன்வளம்– மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நாட்டினர். மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகர் மன்ற துணைத் தலைவர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை, மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், திருச்செந்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

---

காட்டுமன்னார்கோயில் முட்டம் - கடலூர் மாவட்ட முன்னாள் செயலாளர்

## எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி 34ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி - பொதுக்கூட்டம் !

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - கோவி.செழியன் - நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி பங்கேற்பு!

கடலூர், நவ. 8-

தென்னாற்காடு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், பெருந்தலைவர் வீர வேங்கை முட்டம் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்க ளின் 34வது நினைவு நாள் பேரணி, பொதுக்கூட்டம் 11.11.2023, சனிக்கிழமை, மாலை 4 மணியளவில் நடைபெற உள்ளது. தென் னாற்காடு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், காட்டுமன் னார்கோயில் ஒன்றிய பெருந் தலைவரும், வேளாண்மை -உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல் வம் அவர்களின் தந்தையு மான முட்டம் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்க ளின் 34வது நினைவுநாள் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் 11.11. 2023 அன்று நடைபெற உள்ளது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு



மாவட்ட கழக செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட் டக்குழு உறுப்பினருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல் வம், கழக வர்த்தகர் அணி துணை தலைவர், சட்ட மன்ற கொறடா கோவி. செழியன், கழக கொள்கை பரப்பு துணை செயலாள ரும், தமிழ்நாடு தோல் பொருட்கள் உற்பத்தி மற் றும் பதனிடும் தொழிலாளர் நலவாரிய தலைவருமான நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி, மாவட்ட கழக பொருளாளரும், எம்.ஆர். கே. கல்வி அறக்கட் டளை தலைவரு மான எம்.ஆர்.கே. பி.கதிரவன் ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். குடந்தை ஜேம்ஸ் பாண்ட் இன்னிசை நிகழ்ச்சியுடன், பெருந்தலைவரின் மோவூர் நினைவிடத்தில் இருந்து நடைபெறும் ஊர்வலத்தி லும், காட்டுமன்னார்கோ யில் செட்டித் தெருவில் நடைபெறும் பொதுக்கூட் டத்திலும் முன்னாள், இந் நாள் சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், மேயர், ஒன்றிய பெருந்த லைவர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வா கிகள், மாவட்ட இளைஞ ரணி, மாணவரணி, விளை யாட்டு மேம்பாட்டு அணி, தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளி ரணி, வழக்கறிஞர் அணி, இலக்கிய அணி, விவசாய அணி, விவசாய தொழிலா ளர் அணி, நெசவாளர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, மீனவர் அணி உள்ளிட்ட மாவட்ட சார்பு அணிகள், கழக உடன்பிறப் புகள், அனைத்துக் கட்சி தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த உள்ளனர். எம்.ஆர்.கே. நினைவுகல்வி அறக்கட்டளை, காட்டுமன்னார்கோயில் ஒன்றிய, நகர கழக மற்றும் இளைஞரணி, எம்.ஆர்.கே. நற்பணி மன்றம் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை செய்து வருகின்றனர்.

---

ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா தலைமை!

## பெரம்பலூர் மாவட்டக் கழக மகளிர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### குன்னம் சி. இராஜேந்திரன்-எம்.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ.08-

பெரம்பலூர் மாவட்ட மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து ஆலோச னைக் கூட்டம், பாலக்கரை யில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலைமை யில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகா தேவி ஜெயபால் முன்னி லையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால்,

வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.அண்ணா துரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ் மாயில்,சன்.சம்பத், ஒன்றிய செயலாளர்கள் ம.இராஜ்கு மார், எஸ்.நல்லதம்பி, வீ. ஜெகதீசன்,தி.மதியழகன், சி.ராஜேந்திரன், மாவட்ட மகளிர் அணி மாவட்ட தலைவர் பாத்திமா செல்வ ராஜ், மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் தன லட்சுமி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பா ளர்கள் அங்கையற்கண்ணி, விஜி,புளொரா ரெஜி, புஷ்ப ராணி, செல்வராணி, கலை யரசி, வலை தள பொறுப் பாளர்கள் ஜெயப்பிரியா, முருகேஸ்வரி, மாவட்ட மக ளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மக ளிர் தொண்டர் அணி தலை வர் தமிழரசி, மாவட்ட மக ளிர் தொண்டர் அணி துணை தலைவர் சாந்தி, மாவட்ட மகளிர் தொண் டர் அணி துணை அமைப் பாளர்கள் சுதா,நட்சத்திரம், பரமேஸ்வரி, கண்ணகி, சுமதி, வலை தள பொறுப் பாளர்கள் சங்கீதா, கண் ணகி,பேரூர் செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், எம். வெங்கடேசன், ஏ.எஸ்.. ஜாகிர்உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மலையகத் தமிழர்களின் 200-வது ஆண்டு விழாவில் முதல்வர் சார்பில் பங்கேற்க - அனுமதியை தாமதப்படுத்தி

# எனது இலங்கை பயணத்தை தடுத்தது ஒன்றிய அரசு!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

**விருதுநகர், நவ.8-**

**இலங்கையில் மலையகத் தமிழர்களின் 200 ஆம் ஆண்டு விழாவில் முதல்வர் அவர்கள் பங்கேற்க இயலாத சூழ்நிலையில் அவர் சார்பில் நான் பயணத் திட்டம் வகுத்து ஒன்றிய அரசின் அனுமதிக்குக் காத்திருந்தும் உரிய நேரத்தில் எனக்கு அனுமதி தராமல் பயணத்தை ஒன்றிய அரசு தடுத்துவிட்டது என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்துள்ளார்.**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (6.11.2023) விருதுநகரில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :

இலங்கையில் மலையகத் தமிழர்கள் அங்கே குடியேறி தோட்டப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட 200வது ஆண்டு விழாவிற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழைக்கப்பட்டு அவர் செல்ல இயலாத நிலையில் அந்த விழாவிற்கு நான் செல்வதாக முதலமைச்சர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட நிலையில், நானும் அங்கே செல்ல இயலாத நிலையில் கடந்த இரு நாட்களாக பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பல்வேறு செய்திகள் உலா வந்து கொண்டிருக்கக் கூடிய நிலையில் அதுகுறித்த விளக்கத்தினை அரசினுடைய சார்பில் நான் அளிக்க விரும்புகிறேன்.

### மலையகத் தமிழர்கள் சார்பில் முதல்வருக்கு வந்த அழைப்பு!

நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, கடந்த 2ஆம் தேதி இலங்கையின் தலைநகரான கொழும்புவில் மலையகத் தமிழர்கள் அங்கே தோட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு தங்களுடைய வாழ்வியலை இலங்கையின் மலை அடுக்குகளில் வாழத் தொடங்கி, அங்கே இருக்கக்கூடிய தோட்டங்களில் தங்களுடைய பணியினை, உழைப்பினை, இரத்தத்தைச் சிந்தி, வியர்வையைச் சிந்தி, அவர்கள் உழைத்த உழைப்பு அங்கே தொடங்கிய நாட்களை குறிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதற்கு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் முறையான அழைப்பு தமிழ்நாடு அரசிற்கு அனுப்பப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்வில் கலந்து கொள்ள இயலாத நிலையில், அவருக்குப் பதிலாக தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக என்னை அந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் பணித்திருந்தார்கள்.

அதனையொட்டி அந்த விழாவில் நான் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யக் கூடிய வகையில், நான் இலங்கை செல்வதற்கான அந்த ஆயத்தப் பணிகளை இலங்கையில் மேற்கொள்வதற்கு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக நான் அங்கே வருகிறேன் என்பதை அங்கு இருக்கக்கூடிய விழா ஏற்பாட்டாளர்களுக்கு முறைப்படி நாங்கள் தெரிவித்தோம். இதில் மிக முக்கியமாக, முதற்கட்டமாக, இலங்கைப் பயணம் மேற்கொள்வதற்காக ஒன்றிய அரசின் வெளிவிவகாரத் துறையிலிருந்து உரிய அனுமதியினைப் பெறுவதற்கு கடந்த மாதம் 28ஆம் தேதி உரிய வழிமுறைப்படி விண்ணப்பம் நம்முடைய பொதுத்துறையால் அனுப்பப்பட்டுவிட்டது. அதற்குப்பிறகு விழா ஏற்பாட்டாளர்களிடம் நான் தொடர்பு கொண்டு என்னுடைய பயண விவரங்கள் எல்லாம் அவர்களுக்கு அளித்து பயணத்திற்கு வேண்டிய விமான டிக்கெட்டுகள் எல்லாம் ஏற்பாடுகளை செய்துவிட்டு, political clearance என்று சொல்லக்கூடிய வெளிவிவகாரத்தின் அனுமதி கிடைப்பதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன்.

### முதல்வர் சார்பில் நான் செல்ல ஒன்றிய அரசு அனுமதி தரவில்லை!

28ஆம் தேதி அன்று பொதுத் துறையின் வாயிலாக ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டது. விழா 2ஆம் தேதி மதியம். ஆனால் 1ஆம் தேதி இரவு ஒன்பது மணிவரை அதற்கான அனுமதி



ஒன்றிய அரசின் வெளிவிவகாரத் துறையிடமிருந்து நமக்கு அதற்கான அனுமதி வரவில்லை. நான் அன்றைய தினம் ஏறத்தாழ எட்டு, எட்டரை மணிவரை தலைமைச் செயலகத்தில் தான் இருந்தேன். தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய அதிகாரியிடத்தில் அதற்கான ஒப்புதல் வந்துவிட்டதா? என்று விசாரித்தபோது இதுவரை வரவில்லை என்று தெரிவித்தார்.

மறுநாள் காலை விமானத்தில் நான் கொழும்பு செல்வதற்கான பயணத் திட்டங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால், முதல் நாள் 1ஆம் தேதி இரவு எட்டரை மணி வரை நான் தலைமைச் செயலகத்தில் இருக்கும்வரை வரவில்லை. அதற்குப்பிறகு நான் அதிகாரிகளிடத்தில் கேட்டு, இதற்கு பிறகு அத்தகைய அனுமதி கடிதம் வருவது கடினம் என்ற சூழ்நிலையில், அதற்குப் பின்பு நான் இலங்கையில் இருக்கக்கூடிய விழா ஏற்பாட்டாளர்களை அழைத்து, சூழ்நிலையை அவர்களிடத்தில் விளக்கி, ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி இதுவரை வராத காரணத்தால் நான் பயணத்தை மேற்கொள்ள இயலாத நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டி, என்னுடைய பயண ஏற்பாடுகளை நான் இரத்து செய்துவிட்டு வீடு திரும்பினேன்.

### பயண ஏற்பாட்டை ரத்து செய்த பிறகு வந்த அனுமதி!

அதற்குப்பிறகு ஒன்பதரை மணிக்கு மேல் அனுமதி வந்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்னதாக நான் பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்துவிட்ட காரணத்தினால், இரவு 8.30 மணிக்கு மேல் அத்தகைய அனுமதி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி, முறைப்படி விழா ஏற்பாட்டாளர்களிடம் இதனைத் தெரிவித்துவிட்டு பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்து விட்டோம்.

2ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு இலங்கையிலிருந்து நமது முதலமைச்சர் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு இதுபோல தமிழ்நாடு அமைச்சர் அவர்களும் வர இயலாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்துச் செய்தியினை அனுப்பிட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். சுமார் 11 மணிக்கு செய்தி கிடைத்த உடன் பல்வேறு அலுவல்களுக்கிடையே, இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை கருதி உடனடியாக முதலமைச்சர் அவர்கள் நேரம் ஒதுக்கி அதற்கான வாழ்த்துச் செய்தியும் உடனடியாக தயார் செய்து அங்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அந்த வாழ்த்துச் செய்தி இங்கிருந்து பகல் 2 மணிக்குள் அவர்களுக்கு கிடைத்துவிட்டது. அவர்கள் நம்மிடத்தில் தெரிவித்தது நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி ஒளிபரப்பப்படும் (Video clipping) என்று சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய பல்வேறு செய்தி ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது.

### முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி இலங்கையில் ஒளிபரப்பப்படவில்லை!

ஆனால் என்னவாயிற்று என்றால், என்ன காரணத்தினாலோ முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி அந்தக் கூட்டத்தில் அவர்களால் ஒளிபரப்பப்படவில்லை. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழ்நாட்டிலிருந்தும், இந்திய அளவிலும் அந்நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினால் முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி அங்கே ஒளிபரப்ப இயலவில்லை என்பது எனக்கு தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை பத்திரிகையாளர்களாகிய உங்கள் யூகத்திற்கு நான் விட்டுவிடுகிறேன். ஆனால் அதற்கு பிறகு முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளியே வந்திருக்கிறது. இதுதான் இந்த விஷயத்தில் நடந்தது என்பதை இந்த சந்திப்பின் மூலமாக நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1ஆம் தேதி இரவு முதல் 2ஆம் தேதி மதியம் வரை என்ன நடந்திருக்கிறது என்பது குறித்து நான் உங்களிடத்தில் விளக்கம் அளித்திருக்கிறேன்.

**கேள்வி :** மத்திய அரசின் தலையீடு இருக்கிறதா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** நான் குறிப்பிட்டதை போல, யாரையும் நான் நேரடியாக சொல்லவிரும்பவில்லை. ஆனால் என்ன காரணத்தினால், அங்கு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி முறையான வகையில் அவர்களால் ஒளிபரப்ப இயலவில்லை என்பதற்கான காரணத்தை உங்களுடைய யூகத்திற்கு விட்டு விடுகிறேன்.

**கேள்வி :** அனுமதி திட்டமிட்டு மறுக்கப்பட்டதா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** முறைப்படி 28ஆம் தேதி ஒன்றிய அரசிற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. நான் 1ஆம் தேதி இரவு வரை தலைமைச் செயலகத்தில் இருந்தேன். அன்றைக்கு SLBC கூட்டம் இருந்தது. நான் எட்டரை மணியளவில் தலைமைச் செயலகத்திலிருந்து தகவலை கேட்டுவிட்டுதான் கிளம்பினேன். அதுவரை அனுமதி வரவில்லை. மறுநாள் காலை நான் விமானத்தில் செல்லவேண்டும், இரவு நான் தலைமைச் செயலகத்திலிருந்து புறப்படும் வரை அனுமதி வராத காரணத்தினால் நான் முறையாக விழா ஏற்பாட்டாளர்களிடம் தொடர்பு கொண்டு நிலைமையினை விளக்கியதற்குப் பிறகு என்னுடைய பயணத் திட்டங்களை நான் இரத்து செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# இராமநாதபுரத்தில் கைத்தறி கண்காட்சி!

## காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், நவ. 8 -

இராமநாதபுரத்தில் கைத்தறி கண்காட்சியினை துவக்கி வைத்து பாரம்பரிய மிகுந்த கைத்தறி ஆடைகளை வாங்கி நெசவாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண்டுமென மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார்.

இராமநாதபுரம் ஹாஜா மஹாலில் 03.11.2023 அன்று இந்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகமும் மற்றும் தமிழ்நாடு அரசு கைத்தறி துறையும் இணைந்து நடத்தும் மாவட்ட அளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சி துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் ,மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ.பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் பா. விஷ்ணு சந்திரன், தலைமையேற்று மாவட்ட அளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சியினை குத்து விளக்கு ஏற்றி வைத்து கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

இந்திய அரசின் ஜவுளித் துறை அமைச்சகமும் மற்றும் தமிழ்நாடு அரசு கைத்தறி துறையும் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் நெசவாளர்களின் உற்பத்தி பொருள்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ப கைத்தறி கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து இக் கண்காட்சி நடைபெறுகிறது. இக்கண்காட்சியானது 03.11.2023 முதல் 09.11.2023 வரை நடைபெறுகின்றன. இதன் நோக்கம் நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதே ஆகும். பொதுவாக கைத்தறி ஆடைகள் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும். கைத்தறி ஆடையினை பொறுத்த வரை உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்திட மிகுந்த பங்களிப்பை தருகிறது. இத்தகைய கைத்தறி ஆடைகளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்திட வேண்டும் என்ற நோக்குடன் மத்திய, மாநில அரசுகள் இணைந்து கைத்தறி துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை வழங்கி நெசவாளர்கள் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆடைகளை வடிவமைத்து பயன்பெறும் வகையில் இத்துறையின் மூலம் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

இந்த கண்காட்சியில் சுமார் 25க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப் பட்டு அவற்றில் கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், சேலம், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், திருப்பூர், கும்பகோணம், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இணைந்து பரமக்குடி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து கைத்தறி உற்பத்தி பொருட்களை அரங்குகளில் அமைத்து பொதுமக்கள் பார்வையிட்டு தங்களுக்கு தேவையான கைத்தறி ஆடைகளைப் பெற்று செல்லும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன குறிப்பாக நெசவாளர்களின் கலைவண்ணங்கள் மிகுந்த பெட்ஷீட்கள், பட்டு சேலைகள், பட்டு வேஷ்டிகள், கோர சேலைகள், பருத்தி சேலைகள், துண்டுகள், சின்னாளபட்டி சேலைகள், பம்பர் சேலைகள், உயர்தர காட்டன் வேஷ்டிகள், அசல் பட்டு காட்டன் சேலைகள், லுங்கிகள் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையிலும் நுகர்வோர் கண்களுக்குவிருந்தளிக்கும் வகையில் இந்த கைத்தறி ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழக அரசு வாடிக்கையாளர்களுக்கு பருத்திரகங்களுக்கு ஆடைக்கு 30% மும் பட்டு ரகங்களுக்கு ரூபாய் 300 வரை தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. சங்க கமிஷனாக 10% முதல் 30% வரை வழங்கப்படுகின்றது. மேலும் இந்த சிறப்பு கண்காட்சிக்கு இலவச அனுமதி வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற கண்காட்சிகள் மூலம் மக்களிடம் கைத்தறி ஆடைகளுக்கு நல்ல வரவேற்பை பெற்றதுடன் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கண்காட்சியில் ரூ.65.89 இலட்சத்திற்கு விற்பனை நடைபெற்றது. இக்கண்காட்சியில் அதிகளவு பொதுமக்கள் அரசு பணியாளர்கள், தனியார் நிறுவன பணியாளர்கள் வருகை தந்து கடந்த ஆண்டைவிட அதிகளவு விற்பனை நடைபெறுகின்ற வகையில் கைத்தறி ஆடைகள் வாங்கி நமது கைத்தறி நமது பாரம்பரியம் “ என்ற நிலையை உருவாக்கி நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றிட உறுதுணையாக இருந்திட வேண்டுமென மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம். எல்.ஏ. தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறித்துறை உதவி இயக்குநர் ரகுநாத் , இராமநாதபுரம் நகர் மன்றத் தலைவர் ஆர். கே.கார்மேகம் , பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி , இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் த.பிரபாகரன், மண்டபம் ஒன்றிய செயலாளர் கே.ஜே.பிரவீன், மண்டபம் பேரூர் கழகச் செயலாளர் ரகுமான் மரக்காயர், பரமக்குடி நகர் செயலாளர் ஜீவரத்தினம், மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜா டாக்டர் பி.கே. குமார் உட்பட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் சேஷப்பன் , கோதண்டராமன் , கைத்தறித்துறை ஆய்வு அலுவலர் ரெத்தின பாண்டி , கைத்தறி அலுவலர் லெட்சுமி வெங்கட சுப்பிரமணியம் மற்றும் அரசு அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒரு கால பூஜை நடைபெறும் 2 ஆயிரம் கோயில்களுக்கு

# ரூ.40 கோடி வைப்பு நிதி: அரசுக்கு நன்றி!

## கோவில் பூசாரிகள் நலச்சங்கம் பாராட்டு!

கோவை, நவ. 8 -

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் மேலும் 2000 திருக்கோவில்களுக்கு வங்கி வைப்பு நிதி தலா ரூ.2 லட்சம் வீதம் மொத்தம் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தி.மு.க. அரசு சாதனை படைத்துள்ளது என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு பூசாரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

கோவில் பூசாரிகள் நலச் சங்க கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் கோவை மாவட்டம் அரசூர் தங்கநாயகி அம்மன் திருக்கோ விலில் நடைபெற்றது.

கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி. வாசு பூசாரி இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநில பொருளாளர் கே.சுந்தரம் முன்னிலை வகித்தார்.

மாநில துணைத் தலைவர் கணேசன், கோவை மாவட்ட தலைவர் மணி (எ)சுப்ரமணியம், கோவை மாவட்டச் செயலாளர் நரேஷ் குமார், நீலகிரி மாவட்டச் செயலாளர் சங்கர், மாவட்டத் தலைவர் மோகன் குமார், கோவை மாவட்ட ஆலோசகர் நந்தகுமார், பொறுப்பாளர் ஆனந்தகுமார் மற்றும் கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட ஒன்றியப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறாத திருக்கோவில்களை கண்டறிந்து. தினம் தோறும் பூஜை நடைபெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு வங்கி வைப்பு நிதிக்கு வழிவகை செய்துவரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இக்கூட்டத்தில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தலைமை உரையாற்றிய பி.வாசு பூசாரி பேசியதாவது:

ஒருகால பூஜை நடைபெறும் திருக்கோவில்களுக்கு வங்கி வைப்பு நிதியை ரூ.2 லட்சமாக உயர்த்த வேண்டும் என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் முதல்வர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்தது.

இந்த வேண்டுகோளை அடுத்து வங்கி வைப்பு நிதியை ரூ.2 லட்சமாக தமிழ்நாடு அரசு உயர்த்தியது. இதன் மூலம் 15 ஆயிரம் திருக்கோவில்கள் பலனடைந்து வருகின்றன. தற்போது மேலும் 2000 திருக்கோவில்களுக்கு தலா ரூ. 2 லட்சம் வீதம் வங்கி வைப்பு நிதி ரூ. 40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திராவிடமாடல் ஆன்மீக அரசை நடத்தி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசை பூசாரிகள் மட்டுமின்றி தமிழ்நாட்டில் உள்ளவரும் மனதாரப் பாராட்டுகின்றனர் என்று அவர் கூறினார்.

கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்

# சி.எச்.சேகர் தாயார் திருமதி சி.எச்.கிருஷ்ணவேணி மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.8 -

கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச்.சேகர் தாயார் திருமதி சி.எச்.கிருஷ்ணவேணி மறைவு அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினரும், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளருமான சி.எச். சேகரின் தாயாரும், சி.எச்.அப்பல்நாயுடுவின் மனைவியுமான திருமதி. சி.எச். கிருஷ்ண வேணி (வயது 69) அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2023 - திங்கள் கிழமை) இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கலில்,

**கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலத் துணைச் செயலாளருமான சி.எச்.சேகர் அவர்களின் தாயார் திருமதி சி.எச்.கிருஷ்ண வேணி மறைந்தார் என்று அறிந்து வேதனையடைந்தேன்.**

**தனது அன்னையை இழந்து தவிக்கும் சி.எச். சேகர் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வே. ரூசோ**
**நவம்பர் 8 (1998)**



**தனது பள்ளிப் பருவம் முதல் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்.**

**சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளராகவும் – மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இளைஞர்களின் அன்பையும் – மக்களின் நம்பிக்கையையும் பெற்று கழகத் தலைமையின் கனிவான ஆதரவைப் பெற்று, மாவட்டத்து முன்னணியினரின் பாசத்திற்குரிய பண்பாளராக வளர்ந்தவர்.**

**“கண்ணிலேயே நிற்கும் கண்மணி” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 17-11-2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா. கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக ஆக்கப் பணிகள்

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 7.11.2023

**இரா. கிரிராஜன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி திட்டக்குடி நகராட்சியில் 15 வது நிதி குழு மானியம் (2022–2023) ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் ரூ,48.90லட்சம் மதிப்பீட்டில் 3 பேட்டரி வாகனங்கள், 6 இலகு ரக வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் திட்டக்குடி நகரக் கழகச் செயலாளர் – நகர மன்ற துணைத் தலைவர் வி.பி.பி.பரமகுரு, நகர மன்றத் தலைவர் வெண்ணிலா கோதண்டம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (6.11.2023) வாரிய பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மு.பிரதாப், வாரிய செயலாளர் திருமதி துர்காமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் வே.சண்முகசுந்தரம், வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### திருச்செந்தூர் - சேர்ந்தமங்கலத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த

# 3 பேரின் குடும்பத்தாருக்கு தலா ரூ.2 லட்சம் நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 8 -

தூத்துக்குடி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், சேர்ந்தமங்கலம் கிராமம் கிறிஸ்துவின் பாசறை சபை அருகில் கடந்த 31.10.2023 அன்று இரவு இரண்டு இருசக்கர வாகனங்கள் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிய விபத்தில் புன்னக்காயல் கிராமத்தைச் சேர்ந்த லசிங்டன் (வயது 35) த/பெ.ஜேம்ஸ், மற்றும் அலெக்ஸ்சாண்டர் (வயது 34) த/பெ.திரு.தொம்பை ஆகிய இருவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்கள்.

மேலும் வசந்தன் ப்ரீஸ் (வயது 33) த/பெ. மிக்கேல் என்பவர் ஆத்தூர் தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மூளைச்சாவு அடைந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், மூளைச்சாவு அடைந்த வசந்தன் ப்ரீஸ் என்பவரின் உடல் உறுப்புகள் குடும்ப உறுப்பினர்களால் தானம் செய்ய முன்வந்ததன் அடிப்படையில் 6.11.2023 அன்று உடல் உறுப்புகள் தானம் வழங்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு அரசு அவரது தியாகத்தை போற்றுகிறது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இராஜன் என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

### மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 21 திட்டப் பகுதிகளில் ரூ.1330.43 கோடியில்

# 7724 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, நவ. 8 -

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் வாரிய பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 6.11.2023 அன்று நடைபெற்றது.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவிக்கையில். மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 2021-2022 மற்றும் 2022-2023 நிதியாண்டுகளில் ரூ.2,400 கோடி மதிப்பீட்டில் 15000 புதிய வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் 30 திட்டப் பகுதிகளில் 7582 வீடுகள் இடிக்கப்பட்டு ரூ.1627.88 கோடி மதிப்பீட்டில் 9522 வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டு. இதில் 21 திட்டப் பகுதிகளில் ரூ.1330.43 கோடி மதிப்பீட்டில் 7724 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 9 திட்டப் பகுதிகளில் ரூ.297.45 கோடி மதிப்பீட்டில் 1798 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் பல்வேறு மாவட்டங்களில் 6000 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.950 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, இதில் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் திட்டப் பகுதியில் ரூ.149.32 கோடி மதிப்பீட்டில் 969 குடியிருப்புகளும், சிவகங்கை மாவட்டம் கழனிவாசல் திட்டப் பகுதியில் ரூ.130.23 கோடி மதிப்பீட்டில் 900 குடியிருப்புகளும், திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார் பகுதி திட்டப் பகுதியில் ரூ.139.80 கோடி மதிப்பீட்டில் 876 குடியிருப்புகளும் கட்டப்பட்டுவருகிறது.

மாவட்டங்களில் திறந்து வைக்கப்பட்ட திட்டப் பகுதிகளில் காலியாக உள்ள வீடுகளை உடனடியாக நிரப்ப வேண்டும். “நம்குடியிருப்பு நம் பொறுப்பு” திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குடியிருப்பு நலச் சங்கங்கள் மூலம் குடியிருப்பு திட்டப் பகுதியினை தூய்மையாக பராமரிக்க வேண்டும். புதியதாக நியமிக்கப்பட்ட வரி வசூலாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களை கொண்டு தவணைத் தொகையை விரைவாக வசூலிக்க வேண்டும். 90 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்ட திட்டப் பகுதிகளை அடுத்த மூன்று மாதங்களில் முடித்து ஏழை எளிய மக்களுக்கு விரைந்து ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடியிருப்புதாரர்கள் தாங்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்த வலியுறுத்தி மனை மற்றும் குடியிருப்பிற்கான கிரைய பத்திரங்களை வழங்க வேண்டும்

வாரிய திட்டப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் திறன் மேம்பாட்டினை மேம்படுத்துவதற்காக திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தாட்கோ மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கடந்த 2 வருடங்களில் 4988 நபர்களுக்கு இலகுரக வாகன ஓட்டுநர், அழகுக் கலை, ஆட்டோ ஓட்டுநர், துரித உணவு தயாரித்தல், மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது பார்த்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அரசுச் செயலர் சி.சமயமூர்த்தி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர். பொ.சங்கர் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மு.பிரதாப் வாரிய செயலாளர் திருமதி.துர்காமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் வே.சண்முகசுந்தரம், வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நூறு நாள் வேலைத் திட்ட தொழிலாளர்களை வஞ்சிக்காமல்

# ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி அவர்களது வாழ்வில் ஒளியேற்ற வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 8 -

நூறுநாள் வேலை திட்ட தொழிலாளர்களை வஞ்சிக்காமல் நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கி அவர்களது வாழ்வில் தீபஒளியை ஏற்ற வேண்டுமென ஒன்றிய அரசை “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.



தினகரன்

நவம்பர் 7, 2023 செவ்வாய்க்கிழமை

வஞ்சிக்கும் ஒன்றிய அரசு

நூறு நாள் திட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாதமாக ஒன்றிய அரசு சம்பளம் வழங்காததால் பல்வேறு மாநிலங்களிலும் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தீபாவளி பண்டிகை வருவதால் தொழிலாளர்களை வஞ்சிக்காமல் ஒன்றிய அரசு நிதியை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் கடந்த 2006ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் 5.97 கோடி

அது வருமாறு:

நூறு நாள் திட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாதமாக ஒன்றிய அரசு சம்பளம் வழங்காததால் பல்வேறு மாநிலங்களிலும் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தீபாவளி பண்டிகை வருவதால் தொழிலாளர்களை வஞ்சிக்காமல் ஒன்றிய அரசு நிதியை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் கடந்த 2006ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் 5.97 கோடி குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் வறட்சி, கிராமப்புற துயரங்கள் மற்றும் பொதுமக்களின் வேலையின்மை ஆகியவற்றை தீர்க்க ஒரு முக்கியமானதாக உள்ளது. தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றதிட்டமாகவிளங்குகிறது. 2008ல் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, பொருளாதார மந்த நிலையை இந்தியா சமாளிக்க உதவியது. கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது என்பதால் சந்தைகள் மந்த நிலையை சந்திக்கவில்லை.

கோவிட் தொற்றுநோய் பாதிப்பின்போது சொந்த ஊரை நோக்கி மக்கள் இடம் பெயர்ந்தனர். இருப்பினும், இந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் வீடு திரும்பிய கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு உயிர்நாடியாக மாறியது.

இந்த வேலைகளுக்கு வழங்கப்படும் தினசரி ஊதியத்தை ஒன்றிய அரசு தற்போது உயர்த்தியுள்ளது. கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் கூடுதலாக ரூ.7 முதல் ரூ.26 வரை ஊதியம் உயர்த்தியது. குறைந்த அளவே ஊதியம் உயர்த்தியதாக பா.ஜ. கூட்டணி கட்சிகள் மற்றும் எதிர்கட்சிகள் குற்றம்சாட்டின. ஆனால் மாநிலங்களுக்கு மாநிலம் ஊதிய உயர்வு வேறுபடுகிறது. ராஜஸ்தானில் ரூ.231ல் இருந்து ரூ.255 ஆகவும், பீகார், ஜார்க்கண்டில் ரூ.210ல் இருந்து ரூ.228 ஆகவும், சட்டீஸ்கர், மத்திய பிரதேசத்தில் ரூ.204ல் இருந்து ரூ.221ஆகவும் தினசரி ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2023-24ம் நிதி ஆண்டுக்கு ஊதியம் ரூ.294 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது 4.63 சதவீத உயர்வு ஆகும். 100 நாள் வேலை திட்டத்தில், கிராம சபைகள் மூலம் சமூக தணிக்கை செய்வது அவசியம் ஆகும். ஊழலை களைவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் சுயே ச்சையான சமூக தணிக்கை குழு வைத்துள்ளது. அதற்கான நிதியை ஒன்றிய அரசே வழங்கி வருகிறது. ஆனால், சமீபகாலமாக இந்த நிதியை வழங்குவதில் ஒன்றிய அரசு தேவையற்ற கால தாமதம் செய்கிறது. இதனால், சமூக தணிக்கைகள் உரிய நேரத்தில் நடப்பது இல்லை.

இதை காரணம்காட்டி, மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்க மறுக்கிறது. இதனால், சமூக தணிக்கை பணி மட்டுமின்றி, தொழிலாளர்களுக்கு சம்பள பட்டுவாடா செய்வதும் பாதிக்கப்பட்டுள்ளது.

100 நாள் வேலை திட்டத்தை சக்கர வியூகத்தில் சிக்க வைத்து, எதிர்கட்சிகள் ஆளும் தமிழகம், மேற்குவங்கம் உள்பட 15 மாநிலங்களில் நிதியை நிறுத்தி உள்ளது. நூறு நாள் வேலைத்திட்ட நிதியை ஒன்றிய அரசு முடக்கி வைத்துள்ளதால் டெல்லிக்கு படையெடுப்போம் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி எச்சரித்தார். நூறு நாள் வேலை திட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை. இதனால் தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்களில் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். முக்கிய பண்டிகையான தீபாவளியை கொண்டாடும் நேரத்தில் தொழிலாளர்களை வஞ்சிக்காமல் நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கி அவர்களது வாழ்வில் தீபஒளியை ஏற்ற வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்டோர் - மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறை சார்பில்

# ரூ.16.13 கோடி மதிப்பில் புதியதாக 3 மாணவர் விடுதிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.8 -

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பெரம்பலூர், அரியலூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு மாணவர் விடுதி என்ற வகையில் ரூ.16.13 கோடி மதிப்பீட்டில் மூன்று விடுதிகள் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

கல்வியே வளர்ச்சியின் முதுகெலும்பு. அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்காக, குறிப்பாக சமூகத்தின் பின் தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்காக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடத்திற்கான வசதியை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ / மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் 1350 பள்ளி, கல்லூரி விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 1271 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 79 விடுதிகள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முனைப்பாக செயல்பட்டு வருகிறது.

இதன்படி 2023-24-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் மூன்று விடுதிகளுக்கு ரூபாய் 16.13 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக கீழ்க்கண்ட மூன்று விடுதிகளில் மொத்தம் 250 மாணவ / மாணவியர் தங்கும் வகையில் ரூ.16.13 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

1. பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில் 100 மாணவிகள் தங்கும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதி.

2. அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டியில் 50 மாணவர்கள் தங்கும் வகையில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி.

3. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, கோட்டைமேட்டில் 100 மாணவிகள் தங்கும் வகையில் சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதி.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இல. பத்மநாபன் தலைமையில்

# திருப்பூர் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கட்டுரைப் போட்டிகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

திருப்பூர், நவ. 8-

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் 10.11.2023 வெள்ளிக்கிழமை அன்று வெள்ள கோவில், வள்ளியரச்சல் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா மஹாலில் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜி.குகன் ஏற்பாட்டில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.சிவராஜ், பி.அருள், எஸ்.சிலம்பரசன், என். சுமித்தாராணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் மாநில அளவிலான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழிசெல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்குகின்றனர்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கலைஞர் பெற்று தந்த உரிமைகள்! மாணவர் நலனில் கலைஞர்! கலைஞர் காத்த மனிதநேயம் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும், கலைஞர் ஆட்சியில் கல்விப் புரட்சி! ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட கலைஞர்! பெரியார், அண்ணா வழியில் கலைஞர் என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வள்ளுவம் போற்றிய கலைஞர்! திராவிடத்தின் எழுச்சி கலைஞர்! இந்திய ஜனநாயகத்தில் கலைஞரின் பங்கு என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்! மகளிர் மாண்பு காத்த கலைஞர்! கலைஞரும் சுயமரியாதையும் என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் நடைபெறும், இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு பரிசுத்தொகையுடன் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது, மாவட்ட அளவில் முதல் இடம் பெறுபவர் மாநில அளவிலான இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பளர்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.



இராமநாதபுரத்தில் கைத்தறி கண்காட்சியினை துவக்கி வைத்து பாரம்பரிய மிகுந்த கைத்தறி ஆடைகளை வாங்கி நெசவாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண்டுமென மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார். இராமநாதபுரம் ஹாஜா மஹாலில் இந்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகமும் மற்றும் தமிழ்நாடு அரசு கைத்தறி துறையும் இணைந்து நடத்தும் மாவட்ட அளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சி துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் , மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், தலைமையேற்று மாவட்ட அளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் 234/77 ஆய்வுப் பயணத்திட்டத்தின் கீழ் திருவரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில், ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை தெற்கு மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதி விரகனூரில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் முகாமினை கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் இலக்குவன் நேரில் ஆய்வு செய்தார். உடன் தகவல் தொழில்நுட்ப அணி மதுரை மண்டல பொறுப்பாளர் பாசபிரபு, கழக நிர்வாகிகள் கிருஷ்ணபாண்டி, மணி சேகர், தனபால், சிவா, பா.சந்திரன், தமிழ்ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஆத்தூர் ஒன்றியத்தில்

# புதிய வாக்காளர்கள் சேர்க்கும் பணி!

திண்டுக்கல், நவ.8-

ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் ஒன்றியத்தில் 166 வாக்குச்சாவடி மையங்களிலும் புதிய வாக்காளர்கள் சேர்க்கும் பணியில் தி.மு.க.வினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தி.மு.க. நிர்வாகிகள் வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று புதிய வாக்காளர்களாக சேர்ந்தவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடி மையங்களில் புதிய வாக்காளர்கள் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிழக்கு ஒன்றியத்தில் 74 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன.

பித்தளைப்பட்டி, பிள்ளையார்நத்தம், ஆலமரத்துப்பட்டி, என்.பஞ்சம்பட்டி, முன்னிலைகோட்டை, கலிக்கம்பட்டி, செட்டியபட்டி, காந்திகிராமம், அம்பாத்துரை, தொப்பம்பட்டி, மற்றும் சின்னாளபட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் ஈரோடு மணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஹரிராம், ஆகியோர் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று வாக்காளர் சேர்க்கும் பணியை பார்வையிட்டனர்.

சின்னாளபட்டி பேருந்துநிலையம் அருகே உள்ள அரசு நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்திற்கு சென்று பார்வையிட்ட நிர்வாகிகள் புதிதாக வாக்காளர்களாக சேர்ந்தவர்களுக்கு வாழ்த்து தெரிவித்ததோடு திராவிடமாடல் ஆட்சி நாயகன், கழகத்தலைவர் முக.ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் சமுதாயத்திற்காக செய்த சாதனைகளை சொல்லி வரும் நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டுமென வேண்டுகோள்விடுத்தனர்.

ஆய்வின் போது சின்னாளபட்டி பேரூர்கழக செயலாளர் மோகன்ராஜ், முன்னாள் செயலாளர் தி.சு.அறிவழகன், இளைஞர் அணியை சேர்ந்த பாரதிராஜா, கனகராஜ், மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பரமக்குடி கோட்டம், பரமக்குடி நகர் உபகோட்டம் , நகர் தெற்கு & வடக்கு பரமக்குடி பிரிவிற்குட்பட்ட பர்மா காலனி பகுதியில் ஒரு புதிய மின் மாற்றி மற்றும் சிங்காரத்தோப்பு பகுதியில் ஓர் புதிய மின் மாற்றி மற்றும் பரமக்குடி துணை மின் நிலையத்தில் ஓர் 11kv ரூ.16, 25,945 ம் மதிப்புள்ள பிரேக்கரையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், துவக்கி வைத்தார் உடன் பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி , நகர்மன்றத் துணைத் தலைவர் குணா மற்றும் பொதுக்குழு உறுப்பினர் அருளானந்த், மற்றும் மாவட்ட சிறுபான்மையினர் துணை அமைப்பாளர் குலாம் தஸ்தகிர், நைனார்கோவில் ஒன்றிய துணைச் செயலாளர் திலகர் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள், செயற்பொறியாளர் பாலமுருகன், உதவி செயற்பொறியாளர் கங்காதரன் மற்றும் உதவி மின் பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ப.க.சிவகுருசாமி தலைமையில்

# ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய குழுக் கூட்டம்!

திண்டுக்கல், நவ.8-

ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய குழுக் கூட்டம் அறிஞர் அண்ணா கூட்ட அரங்கில் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி தலைமையில் நடைபெற்றது. 100நாள் வேலை திட்டத்தை முடக்க நினைக்கும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது 100நாள் வேலை திட்டத்தை முடக்குவதால் தமிழகத்தில் உள்ள கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை தமிழக ஆளுநர் உருவாக்க நினைக்கிறார் என கூறி ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி கண்டனம் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய குழு கூட்டம் அலுவலக வளாகத்தில் உள்ள அறிஞர் அண்ணா கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் மலரவன் வரவேற்று பேசினார். திருக்குறள் வாசித்தபின்பு கூட்டம் தொடங்கியது கூட்டத்தில் எரிபொருள் செலவினம், எழுதுபொருட்கள் வாங்கியது, 15வது நிதிக்குழு மான்யதிட்டங்களை கணினியில் பதிவேற்றம் செய்வதற்கான செலவினங்கள், அலுவலகத்திற்கு யூ.பி.எஸ்.பேட்டரி வாங்கியது, மற்றும் புதிய ஒப்பந்தகாரர்களை மன்றம் அங்கீகரிப்பது குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. 19வது தீர்மானமாக ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 24 கிராம ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணிபுரிந்த பயனாளிகளுக்கு கடந்த 3மாதமாக வழங்க வேண்டிய ரூ.3கோடியே 32லட்சத்தை வழங்க ஒப்புதல் தராமல் காலம் தாழ்த்தி வரும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் 100நாள் திட்டத்தை நிறுத்துவதற்கு பரிந்துரை செய்வதை கண்டித்தும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் வைக்கப்பட்ட 20 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் திருப்பதி, சுமதி கணேசன், பிரம்மசாமி, விவேகானந்தன், மருதாயம்மாள், பிரபா கரன், மிக்கேலம்மாள், தமிழ்ச்செல்வி முத்துக்கிருஷ்ணன், பாண்டிமீனா, ராயப்பரமேஷ், மிக்கேலம்மாள் ஜஸ்டின், உட்பட ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஒன்றிய பொறியாளர்கள் மகேந்திரன், ராஜேஸ்கண்ணா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிவசுப்பிர மணியன், அண்ணாதுரை, அனுராதா, சரஸ்வதி உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ஒன்றிய துணைத் தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.

## விருதுநகர் மாவட்டத்தில்

# சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.8-

விருதுநகர் மாவட்டம் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், செங்குன்றாபுரம் கிராமம், மூளிப்பட்டி விலக்கு அருகில் கடந்த 05.11.2023 அன்று மாலை மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், முருகனேரி கிராமத்தைச் சேர்ந்த பெண்கள், விவசாயப் பணிகளை முடித்துவிட்டு திரும்பும்போது செங்குன்றாபுரம் கிராமம் மூளிப்பட்டி சாலையின் அருகில் அமர்ந்திருந்த போது அழகாபுரியிலிருந்து விருதுநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் எதிர்பாராத விதமாக தடம்மாறி பெண் தொழிலாளர்கள் மீது மோதிய விபத்தில் மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், ஆறுமுகனேரி கிராமத்தைச் சேர்ந்த திருமதி.பேச்சிம்மாள் (வயது 55) க/பெ. சோணைமுத்து மற்றும் திருமதி.முத்துச்செல்வி (வயது 42) க/பெ. பவுன்ராஜ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளார்கள் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், ஆறுமுகனேரி கிராமத்தைச் சேர்ந்த 4 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நான்கு நபர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியி லிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## கன்னியாகுமரி தக்கலை தெற்கு ஒன்றியம்

# ஊராட்சிகளில் வாக்குச்சாவடி பாகமுகவர் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, நவ.8-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆத்திவிளை ஊராட்சியில் உள்ள 10 வாக்குச்சாவடிகளில் 100 வாக்காளர்களுக்கு முகவர் என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் 06.11.2023, திங்கட்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு நெய்யூர், C.S.I. கம்யூனிட்டி ஹாலில் தக்கலை தெற்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ் பாபு தலைமையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து மருதூர்குறிச்சி ஊராட்சியில் உள்ள 4 வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் மருதூர் குறிச்சி, பிரேம் இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர்- நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக நிர்வாகி களுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர் ம.ஜோசப்ராஜ், தக்கலை தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் ஜெ. ஹர்பட், அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்கள் (BLCs) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பல இன்னல்களை நமக்கு தந்து கொண்டிருக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்தும் விதமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் இன்றே அயராது பாடுபட வேண்டும் எனவும் மேலும் களப்பணியை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கலைஞர் நூற்றாண்டு விழா -

# திருவாரூரில் மாபெரும் ரோபோ போட்டி!

## பூண்டி கே.கலைவாணன் துவக்கி வைத்தார்!

திருவாரூர், நவ. 8-

திருவாரூர் மாவட்ட தி.மு.க. மற்றும் திருவாரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி இணைந்து நடத்தும் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் ரோபோ போட்டி கலைஞர் கோட்டம் அரங்கில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று போட்டிகளை துவக்கி வைத்தார்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழர்களால் சிறப்போடு கொண்டாடப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்ட தி.மு.க. மற்றும் திருவாரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி இணைந்து மாபெரும் மாநில அளவிலான ரோபோ போட்டிகள் திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று போட்டிகளை தொடங்கி வைத்தார். விளையாட்டு மேம்பாட்டு அணி திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் எம்.என். ராஜா வரவேற்புரையாற்றினார்.விழாவில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 50க்கும் மேற்பட்ட விளையாட்டு அணிகள் பங்கேற்று, கணினியால் வடிவமைக்கப்பட்ட ரோபோக்கள் நடத்திய சாகசங்களை காட்சிப் படுத்தினர். இந்த போட்டிகளில் பங்கேற்ற அனைவருக்கும் கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முதல் மூன்று இடங்களை பிடித்த அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவினை மாவட்ட விளையாட்டு அணியின் நிர்வாகிகளான பி.ஜி.ஆர். ராஜா ராம், ப.இளவரசன், எஸ்.ஜாகிர் உசேன், பி.எழில், தி.விமல் ராஜ், பி.ஜி.கோபிநாத்,பொ. பத்மபிரசாத், ஆகியோர் ஒருங்கிணைத்தனர். விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட துணை அமைப்பாளரும் மாவட்ட கூடைப்பந்து கழக தலைவருமான வி.ஆர்.என்.பன்னீர் செல்வம் இறுதியில் நன்றி கூறினார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார்.



## இளைஞர் அணிக்கு கழகத் தலைவர் மூன்று முக்கிய பணிகள் அளித்துள்ளார்!

# ரெய்டு - பொய்ச் செய்தியைக் கொண்டே பா.ஜ.க. கட்சியை நடத்துகிறது!

## கழக தீர்மானக்குழு சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 8 -**

**கழக இளைஞர் அணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் மூன்று முக்கிய பணிகளை அளித்துள்ளார் என்றும் ரெய்டு - பொய்ச் செய்தியை வைத்துக் கொண்டே பா.ஜ.க. கட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறது என்று கழக தீர்மானக்குழு சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இதுகுறித்து அவர் ஆற்றிய உரை வருமாறு:-

கழகத்தின் தீர்மானக்குழு சார்பாக இளைஞர் அணி திறக்கின்ற கலைஞர் நூலகங்களுக்கு நூல் வழங்குகின்ற இந்த சிறப்பான விழாவில், நான் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். உங்களையெல்லாம் சந்திப்பதிலே நான் பெருமை அடைகின்றேன்.

10 மாவட்டங்களில் நூலகங்கள் அமைக்க, தலா ஒரு லட்சம் ரூபாய் என பத்து லட்சம் ரூபாய் மற்றும் ஒரு லட்சம் ரூபாய் இளைஞர் அணியின் மாநாட்டு நிதி வழங்குகின்ற தீர்மானக்குழுவுக்கு முதலில் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சி முதலில் இளைஞர் அணியின் அலுவலகம் அன்பகத்தில் இருக்கக்கூடிய அரங்கத்தில் நடைபெறுவதாக இருந்தது. அங்கேதான் நடத்தப் போகிறோம் என்று என்னிடம் சொன்னார்கள். ஆனால், நான்தான் `இந்த நிகழ்ச்சியை இன்னும் பெரிதாகப் பண்ணுங்கள்' என்று சொல்லி, `அன்பகத்தில் இவ்வளவு பேர் உட்கார முடியாது. கிட்டத்தட்ட 1,000 பேர் உட்கார்ந்து இருக்கிறீர்கள். அன்பகத்தில் ஒரு 200 பேர்தான் உட்கார முடியும். நிகழ்ச்சியைப் பெரிதாக நடத்துங்கள்' என்று நான்தான் அங்கிருந்து இங்கே மாற்றிவிட்டேன்.

ஆனால், இங்கே பார்த்தீர்கள் என்றால், அன்பகத்தில் நடத்தியிருந்தால் இளைஞர் அணிக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் நிதி கிடைத்திருக்கும். அந்த அரங்கத்திற்கு வாடகை.

**என்னிடத்தில் உரிமை எடுத்துக்கொண்ட தமிழ்தாசன்**

அங்கே பத்தாயிரம் ரூபாய் விட்டு கொடுத்து விட்டு, இங்கே 10 லட்சம் ரூபாய் வாங்க வந்திருக்கிறேன். அண்ணன் தமிழ்தாசன் அவர்கள் பேசும்பொழுது மிகுந்த உணர்வோடு பாராட்டிப் பேசினார்கள். சென்ற தேர்தலுக்கு முன்பு என்னிடத்தில் மிகுந்த உரிமையோடு, அப்போது நான் தேர்தலில் சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்படுவேனா இல்லையா, தேர்தலில் போட்டி போடுவேனா, இல்லையா என்ற ஒரு சின்னத் தயக்கம் இருந்தது.

அப்போது என்னிடத்தில் வந்து, மிகுந்த உரிமையோடு நீங்கள் கண்டிப்பாக சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் நின்று, சட்டமன்ற உறுப்பினராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். கண்டிப்பாக, நீங்கள் அந்தத் தேர்தலில் நிற்க வேண்டும் என்று உரிமையோடு என்னிடம் வந்து சொன்னார். இப்போது பேசும்போது கூட குறிப்பிட்டு சொன்னார். வாக்கு அங்கே இருக்கிறது போல என்று அப்போது நான் நினைத்தேன்.

ஏனென்றால், அவருடைய வீடு அங்கு இருக்கிறது. ஆனால், அதற்கு அப்புறம் தான் தெரிந்தது, அவருக்கு அங்கு ஓட்டே கிடையாது என்று. அவருடைய ஓட்டு துறைமுகத்தில் இருக்கிறது. இருந்தாலும், இங்கு மிகுந்த பெருமைப் படுத்திப் பாராட்டி பேசியிருக்கிறார். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் ஒவ்வொரு அணிக்கும் பல பணிகளைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்.

**இளைஞர் அணி சார்பாக கலைஞர் நூலகம்!**

அதிலே இளைஞர் அணிக்கு மூன்று பணி கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் இளைஞர் அணியின் சார்பாக, கலைஞர் நூலகம் அமைக்கக்கூடிய பணி, அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் மாரத்தான் போட்டிகள் நடத்துகின்ற பணி, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிறந்த 100 இளம் பேச்சாளர்களைக் கண்டறிந்து கண்டறிய வேண்டும். இந்த மூன்று பணிகளை இளைஞர் அணிக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரியில் தொடங்கி, கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் கன்னியாகுமரி வரை இளைஞர் அணியின் சார்பாக இதுவரை 14 இடங்களில் கலைஞர் நூலகங்களை பணி நிறைய இருக்கிறது. அந்த நூலகங்களுக்கு நூல்களை வழங்கும் விதமாக நிதி அளித்துள்ள நம்முடைய தீர்மானக் குழுவுக்கு மீண்டும் என்னுடைய அன்பையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, ஒரு அறிவு இயக்கமாக, படிக்கின்ற இயக்கமாக, பேசுகின்ற இயக்கமாகத்தான் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இனமான பேராசிரியர் அவர்களும் நம்மையெல்லாம் வளர்த்து எடுத்தார்கள். அந்த வழியில்தான் நம்முடைய தலைவர் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

அதற்கு, கலைஞர் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களே ஒரு மிகப்பெரிய சாட்சி. அரசு சார்பில், 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `கலைஞர் நூலகம்' திறந்தது முதல் கழகம் சார்பாக இளைஞர் அணியின் சார்பாக தமிழ்நாடு எங்கும் கலைஞர் நூலகங்களைத் திறக்க நமக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்.

இளைஞர் அணியின் இந்தப் பணியில் தீர்மானக் குழுவும் இணைந்து இருப்பது எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த நிகழ்ச்சி எப்படி அன்பகத்திலிருந்து இங்கே இந்தக் கலைவாணர் அரங்கத்திற்கு மாறியதிலே இன்னொரு சிறப்பு உண்டு.

முதலில் இந்த நிகழ்ச்சிக்கு அண்ணன் அக்ரி கணேசன் அவர்கள் தேதி வாங்கிவிட்டார். அண்ணன் தமிழ்தாசன் அவர்களும், குழு உறுப்பினர்கள் எல்லாம் தேதி வாங்கி விட்டார்கள்.

அதன் பிறகு இன்று திருவள்ளூரில் பாக முகவர்களுடைய பயிற்சிப் பாசறை மாநாடு அந்தத் தேதி முடிவானதற்குப் பிறகு இந்தத் தேதி கொஞ்சம் தள்ளி வைத்துக்கொள்ளலாம். அங்கிருந்து வர முடியாது அப்படி என்று ஒரு சந்தேகம் இருந்தது.

இந்த நிகழ்ச்சி நடக்குமா இல்லையா என்று. ஆனால் தீர்மானக்குழு நடத்துகின்ற நிகழ்ச்சி என்பதினால், தீர்மானமாக இதை நடத்தியே ஆக வேண்டும் என்று, நேரம் கொஞ்சம் தள்ளிப்போனாலும் பரவாயில்லை, இன்று இந்த நிகழ்ச்சியை நடத்தியே ஆக வேண்டும் என்று இவ்வளவு சிறப்பாக இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

**தீர்மானக்குழு பெருமை பெற்றுள்ளது!**

கழகத்தின் எல்லா அணிகளுக்கும் மாவட்டம், ஒன்றியம், நகரம், பேரூர், கழகம் எனக் கிளைகள் இருக்கும். ஆனால், தலைமையில் தலைவருக்குப் பக்கத்திலிருந்து இயங்குகின்ற ஒன்றென்றால், இந்தத் தீர்மானக்குழு தான் அதற்கு இந்தத் தீர்மானக்குழு மிகப் பெரிய ஒரு பெருமையைப் பெற்றுள்ளது.

பொதுவாகவே, திராவிட இயக்கத்திற்கும் தீர்மானங்களுக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது. திராவிட இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்குத் தனி வரலாறு உண்டு.நமது இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள்தான் பின்னாளில் அரசால் சட்டங்களாக இயற்றப்படுகின்றன.

தந்தை பெரியார் அவர்கள் 1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டின் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் வரலாற்று புகழ்பெற்றவை. பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமை தரப்பட வேண்டும் என்று அந்த மாநாட்டில் தான் தந்தை பெரியார் அவர்கள் ஒரு மிகச்சிறந்த ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்.

பின்னாளில் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞர் தலைமையிலான நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்தத் தீர்மானத்திற்கு சட்ட வடிவம் கொடுத்தது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியார் அவர்களின் கடைசி காலத்தில் ஒரு மாநாடு நடத்தினர். அந்த மாநாட்டில் தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிப் போராட்டத்தைத் தொடங்கினார். அடுத்த சில மாதங்களில் வயது முதிர்ச்சி காரணமாக தந்தை பெரியார் அவர்கள் இறந்துவிட்டார்.

இதைத்தான் தந்தை பெரியாரை நெஞ்சில் ஒரு முள்ளோடு அடக்கம் செய்கின்றோம் என்று சொன்னார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பெரியார் இறக்கும்பொழுது.

**அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்: நிறைவேற்றிய முதல்வர்!**

இதற்காக நம்முடைய கழக அரசு எடுத்த அனைத்து முயற்சிகளையும் நீதிமன்றத்தின் வாயிலாக, நம்முடைய எதிரிகள் முடக்க முயற்சித்தார்கள். ஆனால், பெரியார் இறந்து ஏறக்குறைய, 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்தவர் களுக்குக் கோயில்களில் பணி நியமன ஆணைகளை வழங்கி, தந்தை பெரியார் நெஞ்சில் இருந்த முள்ளை எடுத்தார்.

இன்னும் ஒரு படி மேலே சென்று இப்பொழுது தமிழ்நாட்டில் மூன்று பெண்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்திருக்கக்கூடிய நிலையை உருவாக்கி இருக்கிறது என்றால், நம்முடைய கழக அரசுதான் நம்முடைய தலைவர் அவர்கள் தான் இதற்குக் காரணம்.

இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும் என்று மாநாடுகளில் நம்முடைய தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானம்தான் இன்றைக்கு தமிழ்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் காத்து நிற்கின்றது. இப்படி நிறைய உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நாம் நிறைவேற்றுகின்ற மாநாட்டுத் தீர்மானங்களானாலும், சட்டமன்றத்தில் நிறைவேற்றுகின்ற சட்ட மசோதாக்களானாலும் அவற்றையெல்லாம் பாசிஸ்டுகளால் ஏற்றுக் கொள்ளவே இயலாது.

முற்போக்கான கருத்துக்களை, சமத்துவக் கருத்துக்களை பாசிஸ்டுகளால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். நமது கழக மாநாடுகளில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள், அதையொட்டி நமது கழக அரசு கொண்டு வருகின்ற சட்டங்கள் எல்லாம் காலம் கடந்து நிற்கக் கூடியவை.

எனவேதான் நம்மைப் பார்த்தால் பழமைவாதிகளுக்கு, சங்கிகளுக்கு எப்பொழுதுமே நம் மீது கோபம் ஏற்படுகின்றது. பேரறிஞர் அண்ணாவின் சிலைகளைப் பார்த்தீர்கள் என்றால், நிறைய சிலைகள் படிப்பது போல்தான் இருக்கும்.

**முரசொலிக்கு எழுதுவது போன்று கலைஞர் சிலைகள் அமைப்பு!**

அதேபோல் நம் கலைஞரின் பல சிலைகளைப் பார்த்தால், கலைஞர் உட்கார்ந்து முரசொலிக்கு உடன்பிறப்பு கடிதம் எழுதுகின்ற மாதிரிதான் இருக்கும். இன்னும் சொல்லப்போனால், கலைஞருக்கு இன்னொரு அடையாளம் என்னவென்றால் பேனா.

கலைஞர் என்றால் பேனா என்ற அடையாளம் இருக்கிறது.

இதன் மூலம் என்ன தெரிகிறது என்றால், ஒரு இயக்கம் படிப்புக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது, கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

தமிழர்கள் எல்லாரும் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் நமது கழகம் உழைத்துக் கொண்டிருக்கிறது. நமது குழந்தைகளின் கல்விக்கும் பாசிஸ்ட்டுகள் எத்தனை முட்டுக்கட்டைகள் போட்டாலும், அவற்றை எல்லாம் எதிர்த்து, இன்றும் நம்முடைய கழகம் களத்தில் போராடிக் கொண்டிருக்கிறது.

நமது குழந்தைகளுடைய கல்விக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் இட ஒதுக்கீட்டுக்காகவும் போராடினோம்.

இப்பொழுது 'நீட்' மாதிரியான போட்டித் தேர்வு கல்வி உரிமைதான் அதுவும். அதற்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கிறோம். 'நீட்' தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை டெல்லிக்குத் தெரியப்படுத்த கழகத்தினுடைய இளைஞர் அணி மாணவர் அணி, மருத்துவ அணி தலைவருடைய கட்டளையை ஏற்று, ஒரு மிகப்பெரிய கையெழுத்து இயக்கத்தைத் துவங்கி இருக்கின்றோம்.

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து வாங்க போகிறோம். இன்றுகூட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய பல பேர் அந்த போஸ்ட் கார்டுகளிலும் இணையதளத்திலும் நீங்கள் கையெழுத்திட்டிருப்பீர்கள். இந்த



நேரத்திலே இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களுக்கெல்லாம் ஒரு கோரிக்கை. இதை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்.

**நீட் பிரச்சினை மாணவர்களுடைய பிரச்சினை!**

இந்த நீட் தேர்வு உதயநிதியின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. இந்த நீட் தேர்வு ரத்து என்பது தி.மு.க.வின் பிரச்சினை கிடையாது. இளைஞர் அணியின் பிரச்சினை கிடையாது. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மாணவர்களுடைய பிரச்சினை. எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுது ஒரு வார்த்தை, ஆளுங்கட்சியாக இருக்கும் பொழுது ஒரு வார்த்தை என்பது கிடையாது.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது நாம் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று போராடினோம். ஆளுங்கட்சியானபோதும் போராடுகிறோம். இதிலிருந்து அ.தி.மு.க.வுக்கும், தி.மு.க. வுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தை நீங்கள் மக்களிடம் எடுத்து கூற வேண்டும்.

ஆறு வருடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். 2007-ஆம் ஆண்டு. கிராமப்புறங் களிலிருந்து ஏழை எளிய மாணவர்கள் படித்து, பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு போதும், நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று சொல்லி நுழைவுத் தேர்வை ரத்து செய்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

இன்னும் சொல்லப்போனால் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் உயிரோடு இருக்கிறவரைக்கும் தமிழ்நாட்டுக்குள் நீட் தேர்வு உள்ளே வரவே இல்லை.

**நீட் தேர்வால் 21 மாணவர்கள் பலி!**

அந்த அம்மா இறந்த பிறகு, ஒன்றிய பா.ஜ.க. அரசும் அடிமை அ.தி.மு.க. அரசும் தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வைக் கொண்டு வந்தார்கள். அரியலூர் மாவட்டத்தில், அனிதா என்ற மாணவி 1,200க்கு 1,176 மார்க் வாங்கியது. அந்த மாணவி அனிதா இப்பொழுது உயிரோடு இருந்திருந்தால், டாக்டர் அனிதா. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து சென்னையில் ஜெகதீஸ் என்ற ஒரு மாணவன். இந்த வருடம் இறந்து போனார். இந்த 6 வருடத்தில் மட்டும் 21 மாணவிகள் நீட் தேர்வினால் உயிரிழந்திருக்கிறார்கள்.

முதன்முறையாக இப்போது சென்னையில் ஜெகதீஸ்வரனின் தந்தையும் `பையன் டாக்டராக வேண்டுமென்று ஆசைப்பட்டான். தற்கொலை பண்ணிக் கொண்டான்' என்று மனசு தாங்காமல் இறந்து போய் விட்டார். அடுத்த நாள் தற்கொலை செய்து கொண்டார். ஒரு குடும்பத்தையே இழந்திருக்கிறோம், நீட் தேர்வுக்காக.

இது தனிப்பட்ட உதயநிதியின் பிரச்சினை கிடையாது. மாணவர்களுடைய பிரச்சினை. இதைக் காப்பதற்கும் இப்போது தி.மு.க.தான் போராட்டக் களத்தில் இறங்கி இருக்கிறது.

என்றைக்கு நீட் தேர்வு தமிழ்நாட்டில் இருந்து ரத்து செய்யப்படுகிறதோ அன்றைக்குத் தான் தி.மு.க.வினுடைய உண்மையான வெற்றி. இந்த நேரத்திலே திருப்பத்தூர் மாவட்டம், ஆன்லைனில் பதிவு செய்வதில்மட்டும் இதுவரை மூன்று லட்சம் கையெழுத்துக்களை நாம் பெற்றிருக்கிறோம். Banneet.in என்ற இணையதளத்தின் மூலம்.

**திருப்பத்தூர் மாவட்டம் முதலிடம்!**

திருப்பத்தூர் மாவட்டம் முதலிடம். நான்கு தொகுதிகளில் இதுவரை 40 ஆயிரம் பேரிடம் கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தேவராஜன் அவர்களுக்கும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடிவேலு அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சென்னை மேற்கு மாவட்டம் இரண்டாவது இடம்!**

அதேபோல் இரண்டாவது இடம், சென்னை மேற்கு மாவட்டம், மூன்று தொகுதிகளி 30 ஆயிரத்திற்கும் மேல் கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு அவர்களுக்கும், இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் பிரகாஷ் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

இவை மட்டும் போதாது. இன்னும் நிறைய கையெழுத்துகளை நாம் வாங்க வேண்டும். இலக்கு 50 லட்சம் என்றாலும், மக்களுடைய எண்ணம் உங்களுக்குத் தெரியும்.

**இலக்கை விட அதிகமாக கையெழுத்தை பெற வேண்டும்!**

தமிழ்நாட்டு மக்கள் என்றுமே நீட் வேண்டாம் என்றுதான் இன்று வரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இலக்கை விட அதிகமான கையெழுத்துகளை நீங்கள் பெற்று தருவீர்கள் என்று நான் நம்புகின்றேன். இந்த மேடையை அதற்காக நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இதுவரை நமது கழகம் நடத்திய எந்தப் போராட்டமாக இருந்தாலும், வரலாற்றை எடுத்துப் பார்த்தீர்களென்றால் கடைசியில் நாம்தான் வெற்றி பெற்று இருக்கிறோம்.

இதிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. சில போராட்டங்களில் வெற்றி பெறுவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படலாம். ஆனால், இறுதியில் நாம்தான் வெற்றி பெறுவோம்.

பாரதிய ஜனதா கட்சிக்கு இப்பொழுதே பயம் வந்துவிட்டது. அது வெளிப்படையாகவும் தெரிகின்றது. அதனால்தான் அமலாக்கத்துறை, வருமானவரித்துறை. நான் பல மேடைகளில் சொல்லியிருக்கிறேன்.

தி.மு.க.வில் பல அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி, இது போன்ற தீர்மானக்குழு எனப் பல குழுக்கள் இருக்கின்றன. தி.மு.க.வின் அணிகள் இதெல்லாம் தலைமை சொல்வதை நாம் களத்தில் இறங்கி செய்வோம். அதேபோல் பா.ஜ.க.வில் இருக்கக்கூடிய ஒரு அணி தான் இந்த அமலாக்கத்துறை, ஐ.டி. இதெல்லாம் தலைமை சொல்வதை இந்த அணிகள் எல்லாம் சென்று செய்து விட்டு வரும்.

இப்போது கூட இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய அமைச்சர் எ.வ.வேலு அண்ணனுடைய வீடுகளிலும் அவருடைய நிறுவனங்களிலும் ஐ.டி ரெய்டு நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

அ.தி.மு.க. அமைச்சர்களை, அ.தி.மு.க. அரசு இருக்கும்போது எப்படி அமைச்சர்களுக்கு எல்லாம் ரெய்டு விட்டு அ.தி.மு.க. என்ற இயக்கத்தைத் தங்களுடைய அடிமையாக வைத்துக் கொண்டார்களோ, அதேபோல் தி.மு.க.வினரையும் மிரட்டலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது. மோடி, நான் சொல்கிறேன்.

**தி.மு.க. கிளைச் செயலாளர்கள் கூட பயப்பட மாட்டார்கள்!**

நாங்கள் உங்களைப் பார்த்து, ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பார்த்து உங்களுடைய ஐ.டியை எல்லாம் பார்த்து எங்களுடைய தலைவர் இல்லை, எங்களுடைய முன்னணி மூத்த தலைவர்கள் இல்லை, தி.மு.க.வின் ஒரு கிளைச் செயலாளர் கூட உங்களைப் பார்த்து பயப்பட மாட்டார்.

எங்களுடைய வளர்ப்பு அப்படி. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், இனமான பேராசிரியர் தாத்தாவும் எங்களுக்கு அந்த சுயமரியாதையைக் கற்றுக் கொடுத்து விட்டுப் போய் இருக்கிறார்கள். எனவே ஒரு கட்சி கொள்கையை நம்பி, ஆட்சியில் செய்து இருக்கக்கூடிய திட்டங்களை நம்பித்தான் பொதுவாக தேர்தலை சந்திக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க.வைப் பார்த்தீர்கள் என்றால், வெறும் ரெய்டு, பொய் செய்திகள் இதை வைத்துக் கொண்டுதான் கட்சியே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இன்னொரு சிறந்த ஒரு உதாரணம், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் போய் பேசினேன். நான் பேசாததையெல்லாம் பேசினேன் என்று சொல்லி, நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டு போய் இருந்தேன் என்றால், அந்த ஹாலுக்குள்ளயே முடிந்து போயிருக்கும்.

யாருக்கும் தெரிந்திருக்கக் கூடத் தெரிந்திருக்காது. அதைப் பொய்யாகப் பரப்பி ஒட்டு மொத்த இந்தியாவுமே அதைப் பற்றிப் பேசி, இப்போது என் மீது வழக்கு போட்டு இருக்கிறார்கள். அண்ணன் சேகர்பாபு மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். நானாவது பேசினேன். அண்ணன் சேகர்பாபு அவர்கள் வேடிக்கை தான் பார்த்தார். நீதிமன்றத்தில் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொன்னேன், மன்னிப்பெல்லாம் கேட்க முடியாது, பேசியது பேசியதுதான். நான் சொன்ன கொள்கையில், உறுதியோடு இருப்பேன்.

நான் முத்தமிழறிஞர் கலைஞருடைய பேரன், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய மகன் யாரிடமும் மன்னிப்பெல்லாம் கேட்க மாட்டேன். நீங்கள் என்ன வழக்கு வேண்டுமானாலும் போடுங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன்.

ஆமாம், வாரிசுதான் நாங்கள் எல்லாம் தந்தை பெரியாருடைய கொள்கை வாரிசுகள். நான் மட்டுமல்ல, இங்கே இருக்கக்கூடிய உங்களையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். ஏதோ ஒரு நாள் கூடினோம் பேச்சைக் கேட்டோம் கை தட்டினோம் என்று கலைகிற கூட்டம் கிடையாது தி.மு.க. கூட்டம். அதை நீங்கள் உணர வேண்டும். கொண்ட கொள்கை யில் உறுதியாக இருப்போம். எனவே, இப்போது பா.ஜ.க. எல்லாருடைய வீட்டிற்கும் ரெய்டு விடுகிறார்கள். தி.மு.க.வில் இருக்கக்கூடிய அத்தனை அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் ரெய்டு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக, அடுத்த வருடம் வரப்போகின்ற தேர்தலில் ஒட்டுமொத்த இந்தியாவும் பா.ஜ.க.விற்கு ரெய்டு விடப்போகிறது. அப்போது தெரியும்.

அதேபோல் சமூக வலைதளங்களில் நம்முடைய கழக மூத்த முன்னோடிகள் பற்றியும் அவர்கள் நமது கழகத்திற்காகச் செய்திருக்கின்ற வரலாற்றுச் சாதனைகள் பற்றி எல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் எழுதி மற்றவர்களுக்கும் அனைவருக்கும் பரப்ப வேண்டும். நமது கழக வரலாற்றை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வரலாற்றையும் நமது இளைஞர்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் நாம் தமிழ்நாடு முழுவதும் தலைவருடைய ஆணையை ஏற்று, கலைஞருடைய பெயரில் அந்த நூலகங்களை நாம் திறந்து வைத்திருக்கின்றோம்.

இந்த ஏக்கம் இப்படி வாழையடி வாழையாக கொள்கைகளை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கிறது என்பதற்கு இந்த மேடையை ஒரு சிறந்த உதாரணம்.

நமது கழகத்தின் அடுத்தடுத்த நிகழ்ச்சிகள் மாநாடுகளில் தீர்மானக்குழு உறுப்பினர்கள் வடித்துக் கொடுக்கின்ற தீர்மானங்கள் நமது தமிழ்நாட்டு மக்களுக்குப் பூச்செண்டுக ளாகவும், நமது எதிரிகளின் ஆதிக்கக் கோட்டையைத் தகர்க்கின்ற கருத்து ஆயுதமாகவும் அமைய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக்கொண்டு இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தீர்மானக் குழுவுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, `வாழ்க கலைஞர் புகழ், வாழ்க கலைஞர் புகழ், வாழ்க கலைஞர் புகழ்' என்று கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ராஜ கண்ணப்பன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான சுதர்சனம், மயிலை வேலு, மாவட்டச் செயலாளர் சகோதரர் சிற்றரசு, இளைய அருணா, நாடாளுமன்ற உறுப்பினரும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். டி.சேகர், தாயகம் கவி, மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், தலைமைக் கழகச் செய்தி தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இந்த நிகழ்ச்சியைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தீர்மானக் குழுவின் தலைவர் தமிழ்தாசன், தீர்மானக் குழுவின் செயலாளர் வைத்தியலிங்கம், கீரை விஸ்வநாதன், அக்ரி கணேசன், துணைத் தலைவர்கள் டாக்டர் வாசிலான், மா.இளங்கோவன், சுப.தினகரன், குழுவின் இணைச் செயலாளர்கள் முத்துசாமி, நாச்சிமுத்து, சத்தியமூர்த்தி, ஜெயக்குமார்,

தீர்மானக் குழுவின் உறுப்பினர்கள் வெங்கடபதி, தங்கவேலு, மிசா ராமநாதன், சேதுராஜன், ஆதிசங்கர், ரெஜினால்ட்,

வெற்றிச்செல்வன், சரவணன், செல்வராஜ், நாச்சிமுத்து, வீரகோபால், காமராஜ், நீலகண்டன், ரகுபதி,

மாவட்ட இளைஞரஅணி அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரப்பன், சகோதரர் எபினேசர், பிரபாகரராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், ராஜா அன்பழகன், வழக்கறிஞர் பிரகாஷ், லோகேஷ்,

திருப்பத்தூர் அமைப்பாளர் வடிவேலு, சகோதரர் கோல்டு பிரகாஷ், காஞ்சிபுரம் யுவராஜ், மதன்குமார், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், சகோதரர் மதுரையைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பகுதி, கழக, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாநில நிர்வாகிகள், பெரியோர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.




# திராவிடப் போராளிகள்

42 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## தனித்து நின்ற தாயாரம்மாள்!



ஓவியம் : ரவி பேலட்

*1927*-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் **'பார்ப்பனரல்லாத வாலிபர் மாநாடுகள்'** தொடர்ந்து நடைபெற்று வந்தன. அந்த மாநாடுகளில் ஏராளமான பெண்கள் பங்கேற்றார்கள். மாநாட்டில் உரையாற்றவும் கொடியேற்றவும் தொடக்கவுரை யாற்றவும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப் பட்டன.

அந்த மாநாடுகளில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் உரைகள் எதிரிகளுக்குக் கலக்க மூட்டின. அதனால் **'சுதேசமித்திரன்'** ஏட்டில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளைப் பற்றி **'அவள், இவள்'** என்று ஒருமையில் விகுதியிட்டுக் குறிப்பிட்டிருந்தனர். அதனைத் தந்தை பெரியார் கடுமையாகக் கண்டித்துக் **'குடிஅரசு'** இதழில் எழுதியிருந்தார். அந்தக் கண்டனத்தினைக் குறிப்பிட்டு **'சுதேசமித்திரன்'** ஏடு வருத்தம் தெரிவித்தது.

"சமீபத்தில் ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகள் 'மித்திரனின் (சுதேசமித்திரன்)' பிரசுரமானதில் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயார் அம்மாள் 'பேசினாள்' என்று பிரசுர மாகி விட்டதாக அறிந்து வருந்துகிறோம். மிஸ் மேயோவைத் தவிர, வேறு எந்த ஸ்திரீக்கும் 'அள்' விகுதி சேர்த்து எழுத மித்திரன் சம்மதப்படவில்லை. நாம் அறியாமல் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வருந்தும்படி எழுதப்பட்டு விட்டதற்கு வருந்துகிறோம்" (குடிஅரசு, 16.10.1927)

**'சுதேசமித்திரன்'** குறிப்பிட்ட மிஸ் மேயோ என்பவர் **'இந்திய மாதா'** (*MOTHER INDIA*) என்ற நூலை எழுதிய அமெரிக்க வரலாற்றாசிரியர் ஆவார். அந்தச் செய்திக்குக் காரணமான அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் திராவிட இயக்கத்துக்கு முன்னோடியான நீதிக்கட்சியின் முன்னோடியாவார்.

### பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் முழங்கியவர்

தென்னிந்தியாவில் பார்ப்பனரல்லாதார் அரசியல் அதிகாரம் பெறுவதற்கு அடித்தளமாக அமைந்த நீதிக்கட்சியின் வரலாற்றை ஆய்வு செய்யும் ஒவ்வொருவரும் இந்த மறுமலர்ச்சியின் தொடக்கப் புள்ளியாகக் குறிப்பிடுவது 1916-ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா ஹாலில் கூட்டப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் கூட்டம் ஆகும்.

திராவிட இயக்க, ஆதரவு கொண்ட ஆய்வாளர்கள் மட்டுமல்ல, ஏ.எஸ்.ஐயங்கார் எழுதிய நூலிலும் (*ROLE OF PRESS AND INDIAN FREEDOM STRUGGLE; ALL THROUGH THE GANDHIAN ERA*) 1916-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் தேதி சென்னையில் கூடிய அந்தக் கூட்டத்தைப் பற்றியும் அதில் உரையாற்றியவர்கள் பற்றியும் அந்தக் கூட்டம் ஒரு பெரும் இயக்கமாக மாறியதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கூட்டத்தில் பேசியவர்கள் பட்டியலில், டாக்டர். சி.நடேசன், பிட்டி.தியாகராயர், டி.எம்.நாயர் ஆகிய பெயர்களோடு தவறாமல் பதிய வைக்கும் மற்றொரு பெயர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள்.

அந்தக் கூட்டத்தில் தொடங்கப்பட்ட அரசியல் முழக்கமே **'பார்ப்பனரல்லாதாரின் கொள்கை யறிக்கை'**யாக வெளியானது. தென்னிந்தியாவின் அன்றைய மிகப்பெரும் ஆளுமைகள் பங்கேற்ற அந்தக் கூட்டத்தில் தனிப்பெண்ணாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பங்கேற்றுள்ளார். அதன் பிறகு 1917-ஆம் ஆண்டு நடைபெற்ற பார்ப்பன ரல்லாதார் முதல் மாநாட்டில் பங்கேற்று உரை யாற்றிய ஒரே பெண் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அது மட்டுமின்றி, அதைத் தொடர்ந்து பார்ப்பனரல்லாதார் அனைத்துச் செயல்பாடுகளிலும் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாவின் பெயர் தவறாமல் இடம்பெற்றுள்ளது. அந்த வகையில், நீதிக்கட்சியின் முன்னோடிகளில் ஒருவரான அலர்மேலு மங்கைத் தாயாரின் செயல்பாடுகள் தனிச்சிறப்புடையவையாக உள்ளன.

### நீதிக்கட்சி மேலவை உறுப்பினர்

*1927*-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் பிராமண சங்கம் பல நிகழ்வுகளை நடத்தியது. **'வருணாசிரம மாநாடு'** நடத்தி தங்கள் சமூக ஆதிக்கத்தை நிலைநிறுத்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனை எதிர்த்து, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் தலைமையில் ஓர் அமைப்பு உருவானது. அந்த அமைப்பின் பெயர் **'பார்ப்பனியப் புரோகிதப் பகிஷ்காரச் சங்கம்'**. அதன் முதல் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றியவர் பெரியார். தீர்மானங்களை முன்மொழிந்து பேசியவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அதைத் தொடர்ந்து உரையாற்றியவர்கள் நாகை நீலாம்பிகையம்மாள், நமச்சிவாய முதலியார், பேராசிரியர் கா.சுப்பிரமணியப் பிள்ளை எம்.ஏ.எம்.எல்., ஆகியோர்.

> **ஓர் இயக்கத்தின் அனைத்து செயல்முறைகளிலும் பங்கேற்கும் ஆற்றலும் துணிவும் ஒரு சிலருக்கே வாய்க்கும். அத்தகைய ஆளுமையாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வாழ்ந்தார்!**

*1931*-ஆம் ஆண்டு நீதிக்கட்சியின் சார்பாக, சென்னை மாகாண சட்டசபையின் மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச் சிறப்பாகப் பணியாற்றினார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். தமிழுணர்வு, சுயமரியாதை, சமத்துவம் என்ற திராவிட இயக்கக் கோட்பாடுகளை நடைமுறையில் பின்பற்றியவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள்.

சான்றாக , *1934*-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாட்டில் உரையாற்றிய பெருமையும் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளுக்கு உண்டு. அந்த சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தின் ஏழாவது மாநாடு *1940*-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றபோது, அதிலும் அமைப்பாளராகவும் உரையாளராகவும் பங்கேற்றவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அச்சங்கத்தின் தொடர் நிகழ்வுகளில் பங்கேற்ற மற்றொரு பெண் மீனாம்பாள் சிவராஜ் அம்மையார்.

### தனிப்பெயர் தனித்தன்மை

*1936*-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் சார்பாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் உரையாற்றியபோது, அவரை எதிர்த்து, அவர்மீது முட்டையும் செருப்பும் வீசப்பட்டன. ஆனால், அதற்கெல்லாம் அவர் அஞ்சவில்லை. மாறாக, முட்டை வீசியவர் அடுத்து செருப்பை வீசத் தொடங்கியபோது அவரைக் கையோடு பிடித்து இழுத்துச் சென்று மேயரிடம் ஒப்படைத்தார். இந்தச் செய்தியை நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டுவது பற்றிய தன்னுடைய உரையில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்.

ஓர் இயக்கத்தின் அனைத்து செயல்முறைகளிலும் பங்கேற்கும் ஆற்றலும் துணிவும் ஒரு சிலருக்கே வாய்க்கும். அத்தகைய ஆளுமையாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வாழ்ந்தார் என்பதற்கு மற்றொரு சான்று, அவர் பெயர் தனிப்பட்ட முறையில்தான் அனைத்துச் செய்திகளிலும் இடம்பெற்றது. தந்தையின் பெயராலோ கணவரின் பெயராலோ அடையாளம் சொல்லப்படாத பெண்ணியவாதியாகத் தனது தனித்தன்மையை நிலைநிறுத்தினார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள்.

தொடரும்...

(வருவார்கள்...)

## கீழடியும் கிருஷ்ணன் கட்டுக்கதையும்!



**க**ட்டுக்கதைகள் கலக்காத இந்தியத் துணைக்கண்ட வரலாற்றை நேர்த்தியாக சுடப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களிலும் 'ஆறு கிடந்தன்ன அகனெடுந் தெருக்களிலும்'தான் தொடங்கவேண்டும்.

யாருக்கும் பிடிக்கிறதோ இல்லையோ அத்தகைய நகர்மய வாழ்வியலின் தரவு சார்ந்த உச்சம் ஹரப்பா மொகஞ்சதாரோவில் 5000 ஆண்டுகளுக்கு முன்பு.

இந்தியத் துணைக்கண்டத்தின் இத்தகைய நகர்மய வாழ்வியல் பற்றிய துல்லியமான ஆவணப்பதிவு, யாரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 'செம்பு புனைந்து இயற்றிய சேணெடும் புரிசைகளை' கொண்டாடிய; 'இருபால் பெயரிய உருகெழு மூதூர்' என்று நகர் வடிவமைப்பு பேசிய, தென்கோடித் தமிழ்நாட்டின் சங்கத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில்தான் உள்ளன.

இவை இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே. இவை இரண்டுக்குமான காலம், தூரம் என்ற இருபரிமாண இடைவெளி, புதிய அகழாய்வுத் தரவுகளால் சங்க இலக்கியங்களின் புத்தொளி மீள்வாசிப்பால் காணாமல் போகும் அல்லது சுருங்கும்.

ஹரப்பா, மொகஞ்சதாரோ, தோலாவீரா, லோத்தல், தைமா பாத், ஆதிச்சநல்லூர் சிவகளைக் கொற்கை அழகன்குளம் கொடு மணல் கீழடி இல்லாத இந்தியத் துணைக்கண்ட வரலாற்றைக் கற்பனை செய்து பாருங்கள்.

உங்கள் கைகளில் இரண்டு இதிகாசங்கள்; சில பத்துப் புராணங்கள்; தேவலோகத்து ஊர்வசி நடனம்; பத்து தலை அசுரர்கள்; அசுரனாகிப் போன சிந்துவெளி எருமை என்று கதைகள் மட்டும் மிஞ்சும். கலைகளால் நிரம்பி வழிந்த மகத்தான நாகரிகத்தின் குரல்வளைகள் கொலைகளால் நிரம்பிக் குருதி வழியும்.

'கீழடிக் கிண்ணத்தில் கிருஷ்ணர் சாப்பிட்ட வெண்ணெய் வாசம் இருக்கிறது' என்று கதைகளும் கூடச் சொல்லப்படும். வரலாறு என்பது வந்த வழி! காப்பாற்றப்பட வேண்டியது நிகழ்காலமும் எதிர்காலமும் மட்டும் அல்ல. கடந்த காலமும்தான்.

**-ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் முகநூல் பதிவு**

## :ப்ளாஷ்பேக்





ரமேஷ்

### விடியல் பிறந்தநாள்!

**ஆ**ண்டுதோறும் மார்ச்-1 ஆம் தேதி அன்று, கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள், **'இளைஞர் எழுச்சி நாள்'** என, அன்பகத்தில் பகுதிக் கழக நிர்வாகிகளுக்குப் பரிசளித்து, கேக் வெட்டப்பட்டு சிறப்பாகக் கொண்டாடப்படும். 1994-ஆம் ஆண்டு அந்நாளில் அண்ணன் அன்பகம் கலை, அப்போதைய தென் சென்னை மாவட்டச் செயலாளர் சைதை கா.கிட்டு, ஆயிரம் விளக்குப் பகுதிச் செயலாளர் மு.நடராஜன், ஆயிரம் விளக்கு இளைஞர் அணி அமைப்பாளர் மா.பா.அன்புதுரை மற்றும் ஆயிரம் விளக்கு கழக உடன்பிறப்புகளுடன் நானும் கலந்துகொண்டு தளபதி அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தேன். அப்படியான தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப் படம் இது.

**-ம.ரமேஷ்,**
**துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்,**
**தமிழ்நாடு மின்சார வாரியம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### விமர்சனத்தை விவேகமாக்குதல்!

**1957-ஆம் ஆண்டு, தேர்தல் வெற்றி விழா கூட்டத்தில் அறிஞர் அண்ணா சிறப்புரையாற்றினார். "திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி அதிகமா குறைவா? என்று சிலர் பேசுகின்றனர். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். கேலி பேசுபவர்கள் தயவு செய்து நாங்கள் வெட்கப் படும் அளவுக்குக் கேலி பேச வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் எங்களின் ஆர்வம் பெருகும். திராணி மேலும் வளரும். வேகமாக ஓடும் குதிரையை சவுக்கால் தட்டிக் கொடுத்தால், அந்தக் குதிரை மேலும் வேகமாக ஓடும் என்பதுபோல, உங்கள் கேலி எங்களை வேகமாக ஓட வைக்கும்" என முழங்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 294




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131